இதைச் "வெகாமமே என்றும் கிலேயான மெய்ப்பொருளாகு மென்பதைச் சமண ருக்குக காட்டும்படி இவை அக்கினியி லிடப்படுமாயின் பழுத இல்லே ;| இத சதிய மெனனுக கருததைபுடைய தளிரின வளரொளி எனனும் பதிகத்தைப் பாடி வனனி யிற புகுதக என்ற கூற" என்பத இராமகாதச் செட்டியா ருரைகருறிப்பு. இவவா தன்றி, எண்டெடுத்தும் எனப பாடதகொண்டு, என்ற எடுத்தும், - நாமமே என்ற கூறியும் - பாடி என்ற உரைகொள்வர் ஆறமுகத் தம்பிரானர். 784

2683. (வி - ரை) செம்யதாமரை...சீவந்த - செம்யதாமரை - செந்தாமரை; செந்தாமரைப புறவிதழும் சிவபபுகிற மிக்கன ; அதன் அகவிதழ் அவற்றினும் மிகச் செவப்புடையன.

மிகச்சிவந்த-பிளனேயாதிருக்கைகள் அவ வகலிதழினும் மிகச் வெந்தன ; என்று இவவாற சிவபப ஒனறறகொன றேறறமாக் கூறியத உவமைசயம் ; இதகு நிறம் ஒன்றேபறறிக் கூறினுரேனும் இனம்பறறி மென்மைப பண்பும மெயயும் உருவம்பறறி யும உவமை பொருநதக கொளக ; ஈசவ மெய்த திருவாகிய திருநீறறினே வழஙகிய கிலேயினுல் பயனபறறியும உவமம் குறிககொளக.

கையில் - கையில கொணட. "கைதலதநிடைக கொண்டனா" (2681).

கைதவன் பேரவை கண - "திருநதவை முண்ணாத தழலமைக கென" அர சன வினமையால் (2677) அரதப பேரவை முழுஅம காணுமபடி என்க.

தீயினில் - இட்டார் எனற கூட்டுக ; தீந்தை வேகலாவது - நீ வாநில வரும தோல்வியினுல அவாகளத சிந்தை கரிகதொழிய. ஆகான என்பத பாவனே ; பாடி - என்பத மாதிரம் , இட்டார் என்பத கிரியை - என மூன்றும் கொள்க.

வையம் உய்ந்திட - உணமைத தெயவத்தன்மையின் நிலை கண்டுணர்ந்து, உலகம் உய்ய வந்தவர் - அவதரித்தவா ; பாண்டிநாடுய்ய அதனுல் உலகுயய அக்காட்டில் எழுந்தருளி வநதவா என்ற குறிபபுமாம்.

மகிழ்ந்து - உள்ளாறந்த நாமமே, எரியில் பழுதபடாத மெயம்மை யிதவென்ற காட்டி உலகுகுப போகம் கொடுககும எனறுணராதிகொணடாராதலின மகிழாத னா; அமணா இவவாறன்றிக் கவலியாம உணாவிஞல, கையுகெனராகியே நடுகின் றிட்டார (2685) எனபத காணக ; தெயவததனமை யின்றிக கறபித்துப் பூனாத பொயயும வஞசனேயுமாதலின் அவா நடுகினார் எனக.

முன் - அமணா இவவதறகு முனபு ; பொருணிலேயின் வாயமை பெறறுடையா ராதலின மகிழதலும், அவரின முனனரே இதெலும் ஆயிறறு. 785

திருநள்ளாறு

நிருச்சிறறம்பலம திருவிராகம் - பண் - சாதாரி

தளிரிள வளரொளி தனதெழி தருகிகழ மலைமகள்
குளிரின வளரொளி வனழலே யிணேயவை தலவலின்
களிரின வளரொளி மருவுநள் ளாறர்தந் நாமமே
மிளிரின வளரோசி யிடிலிவை பழதிலே ; மெய்ம்மையே. (1)

சிறறிடை யிரிவைதன் வனழலே யிணேயோடு சேறிதந
கறறிற முறுகழு மலகா ஞானசம பகதன
கொறறவ னெதிரிடை யேரியினி லிடலிவை கூறிய
கொற்றெரி யொருபத மறிபவர் தயிலர் தயரே. (11)

நிருச்சிறறம்பலம்

பதிகக் குறிப்பு :—வந்த சேர்ந்த கையிறகொண்ட திருஞ்ஞாற்றுப் பதிகம் எழுதிய இத்திருவேடு திருஞான்ஞாறர்தம் நாமமே பாட்டுக்கள்தோறும் கொண்டுள்ளது; மங்கையர்கள் வனமுலையிணையொடு குலவுதலால் எரியினில் இடில் இவை பழுதில்லை. இது மெய்ப்பொருள். அரசன் எதிரில் இவ்வேட்டினை எரியினில் இட இதனைப் போற்றினேன் - என்பதாம்.

பதிகப் பாட்டுக் குறிப்பு :—(1) இனவளர் என்ற நான்கடியினும் சொற்பொருட் பின் வருநிலையாய வைத்தம், தளிர் - குளிர் - நளிர எனக குளிர்ச்சி பொருந்த வைத்தும் கூறியது எட்டினையிடும் எரியினைக் குளிர எணணிய திண்மையுணர்வு ; நீற்றறையாகிய நீயினடுவள் நின்ற அரசுகள் அதனை மதி - தென்றல் - பொயகையாகிக் குளிர்ந்த திருவடிநீழலாக உணர்ந்த திணமையினை இதனு நினைவுகூர்க ; மலைமகள் - வனமுலை குலவலின் - நள்ளாறர் நாமம் - போகமார்த்த பூண்முலையாள் தன்னெடும் பொன்னகலம், பாகமார்தத பைஙகண் வெள்ளேற்ற றணணல் பரமேட்டி " என்ற அப பதிகத்தின் வர்த்தனோகத முதறபாட்டின் பகுதியிற றோன்றிய திருவருட் குறிபபு. குலவலின் - நாமமே - எரியிடில் - பழதிலை - என்றதன் கருததை ஆசிரியா மேல் வரும் "இட்ட ஏட்டினில்" (2684)ல் விரிததருளுமாற்ருல அறிக ; நளிர் - குளிர்ச்சி; மெய்ம்மையே - அமணா காட்டவேணடுமெனக கூறிய வாய்மை ; நாமமே வாய்மை எனறதாம். பழதிலை என்பது மெய்ம்மை - சத்தியம் என்ற ஆணை தந்ததாகக் கூறலுமாம. முலை - குலவலின் - நாமமே எரியிடில் பழதிலை மெய்ம்மையே என்பன பதிகம் எல்லாப பாட்டுகளிலும் அறுதிபெறக் கூறியருளபபடுதல் காணக;—(2) நாதம் - அருவத் திருமேனிகள் நான்கனுள் ஒன்று ; அவை சிவம் சத்தி நாதம் வித்து என்பன. மீதமது - மேம்பாடுடையது ;—(3) கலவல் - கலத்தல் ; கூடுதல் ; நட்டுறு - நடுதல் பொருந்திய ; இட்டுறு - இதற்கென்ற வளாக்கப்பட்ட ;—(4) மைக்சு - மைத்து என்பதன் போலி ; மை நீட்டிய ; மை பொருந்திய ; நக்சு அணி - நஞ்சு என்பது எதனை நோகி வலித்த நின்றது ; மெக்சு - ஏத்திப் புகழும்; —(5) தளிர் நண்ணிய என்க. நண்ணிய புனல் புதும் - வெள்ளம் பரந்தபோது அப்புனல் தானே வயல்களுட் புருதற்கிடமாகிய எனறலுமாம ; " வயல்புகு பொன்னி " ; விண்ணியல் எரி - தேவர்களுள் ஒருவனுகிய நீலகடவுள். " காயும் வெவ்வழற் கடவுளும் " (2678) ;—(6) தூறு - தூதும் - மா ; மாஙகனி போன்ற ; மெய்பற்றி வந்த உவமம் ; தூது - சூதாடவட்டு ; உறுதல்-போலுதல் ; உவமவுருபு உருவு பற்றிய உவமம்; என்றலுமாம். மீதுறுமேரி-மேலகோக்கி எரியும் இயல்புடைய நீர்; மேம்பட்ட பொருளே வேவாமல் எடுததுக்காட்டும் எரி என்ற குறிபபும் காணக ;—(7) நது நலை-இறைவர் சிரத்திறருகும் கருசிரம் ;—(8) மன்னிய-வளர் ஒளி - நிலபெறற வளரும் ஞானவொளி ; தன்னியல் - (தசமுகன்) தன்னியல்பே - ஆணவ இயலே - மிக்க ; தன் (இறைவரது) இயல்பினுல் வேறு முயறசியின்றி என்றலுமாம் ; மீன்னியல் - விளக்கம் செய்யும் ;—(9) கான்முக மயில் - கானில் வாழும் மயில் ; கான் - காடு ; முல்லைநிலம். குறிஞ்சிபு முல்லையுக கலக்துள்ள நிணையுமாம் ; மேன்முக எரி - " மீதுறு மெரி " (6) என்ற கருதது ; மேன்மையைக் காட்டும் முக முடைய என்ற குறிப்புமாம் ;—(10) அத்திரநயனி - அத்திரம் - வேல் ; வேல் போன்ற கண்ணேயுடையவள் ; போய் பெயரும் - பொய்யைப் பெயர்விக்கும் - போக்கும். இது சரித வரலாற்றுக் குறிப்புடைய அகச் சான்று ;—(11) நற்றிறமுறு - சோல் - "கன்மையுய்க்கு மெய்ப்பதிகம்" (2682); கோற்றவ னெரிதிடை எரியினி லிடவிவை கூறிய - பதிகம் அருளிய காலம் - இடம் - வரலாறு - குறிப்பு - கருத்து முதலிய சரித நிகழ்ச்சியெல்லாம் குறிக்கும் அகச்சான்று.

குறிப்பு :—இப்பதிகம் மதுரையில் அரசன எதிரில் வேற தலமாகிய திருன் ஞாற்றிணப்பற்றிப் பாடிய பதிகம். முன்பிரமபுரத்தைப் பாடியதும் பின்னரும் பாடுவ தம்போலவும் காண்க; "நள்ளாறுடைய ஈசனே-ஆல வாயின்கண் வந்தமர்ந்த வாறென் கொல் சொல்லாய்" என்ற கருத்துடன் பின்னாத திருஞ்ஞாற்றில் அருளும் வீனு வுரை - திருஞ்ஞாறும திருவாலவாயும் - என்ற (சட்டபாடை) பதிகத்தாலும் சரித வரலாறுகளின் இப்பகுதி அகச்சான்றுடன் உறுதி பெறுதல் காண்க.

2684. இட்ட வேட்டினி லெழுதிய சேந்தமிழ்ப் பதிகம்
மட்டு லாங்குழல் வனமுலை மலைமகள் பாகத்
தட்ட மூர்த்தியைப் பொருளென உடைமையா லமர்ந்து
பட்ட தீயிடைப் பச்சையாய் விளங்கிய தன்றே. எஅசு

(இ - ள்) இட்ட...பதிகம - மேறகூறியவாறு பிஞ்ஞாயார தமது கையிஞல் தீயிடை இட்ட எட்டிலே எழுதபபட்ட திருஞ்ஞாறறைப பொறறும் செந்தமிழ்த் திருபபதிகம; மட்டுவலாம்...உடைமையால் - மணம் வீசுகின்ற கூந்தலியும் அழகிய முலைகளையுமுடைய மலைமகளாராகிய உமையம்மையாரை ஒருபாகத்திற கொண்ட அட்டமூர்த்தியாகிய சிவபெருமானேயே பொருளாகக்கொண்ட டுடைமையாலே; அமாகதி பட்ட - பொருஞ்சி டிகத; தீயிடை ..அன்றே - தீயினிடையே வேவா திருந்ததனுடனே பச்சையாயும அபபொழுதே விளங்கிறது.

(வி - ரை) பதிகக குறிபபைக் காட்டி, அது திருவருட் குறிப்புடன் பொருந்தி யமையால் எடு வேவாமைகருகிய காரணத்தை ஆசிரியர் எடுத்தபபதேசித்தபடி.

இட்ட ஏடு - பிஞ்ஞாயார் தீயினில இட்ட ஏடு.

பதிகம் - அட்டமூர்த்தியைப் பொருளென உடைமையால் - பதிகம் - சொல்; அட்டமூர்த்தி அதனற குறிகக்படும பொருள; "பதிகத்தின் காதன்"; "ஈசன்றன் காமமே" (2682) என்றவையும இக்கருத்த, பொருளினே உட்கொண்டமையாற் சொல்லும், அதனே மேறகொண்டதனால அது எழுதபபட்ட ஏடும் அததன்மைபபட்டு வேவாதிருகதன எனபது.

அட்டமூர்த்தி - "நிலனீர நெருபபுயிர நீளவிசுமபு நிலாபபகலோன, புலனுய மைகதனே டெணவகையாயப புணாகதனிஞருன்" (திருவா. தோணே - 5) மண் - நீர - தீ - காறற - வான் என்ற ஐமபூதஙகளும் ஞாயிறு - மதி - உயிர என்ற மூன் றும் ஆக எட்டும இறைவரது திருமேனி என்ப. ("புலனுய மைகதன" என்றதனால் வேய எழும் அசித்த எனறபடி)

அட்டமூர்த்தியைப் பொருளென உடைமையால் - பச்சையாய் விளங்கியது - என்றதெனனே? எனின கூறுதும: முன்கூறியபடி எட்டு மூர்த்தஙகளுள் எரி - நீ - யும் ஒன்று; மூர்த்தம - மூர்த்தி - என்பத உடல; அவ்வுடலுள உயிராய இருப் பவன் மூர்த்திமான்; உயிரையன்றி உடலுக்குச் செயலில்லை; உடல் தனிதிறியன காத; அரசன் முன் அமைதத எரி உடலும், அதனுள் இட்ட ஏடு அவ்வெரியுள்ளிட்ட எட்டினையும உடலாக்கொணட மூர்தத்திமானுகிய உயிர. ஆதலின உடலினுள் உயிர் பொருந்தியவாறு இவ்வேடு அமர்ந்தபபட்டுப பச்சையாய் விளஙகியது. உடல் உயிரை அழிக்கமாட்டாதன்றே? ஆனல் ஏடு இவ்வாறன் முன்னரும் எரியாகிய உடல் அவ் வுயிரை இன்றியமையாமல் உட்கொணடிருந்ததன்றே? எனின், அஃதொக்கும். முன் னரும் அத்தீ உயிருடன்தானிருந்தது. இறைவனது திறைவு யாண்டுமுள்ளதன்றே? ஆயின் பின்னர்ப் பதிகம் எழுகிய ஏடு, அத நீராகிய ஒருடம்பு அளவின்மட்டிலன்றி

எட்டும் உடம்பாக உடைய மூர்த்தியை உட்கொண்டது. ஆதலின் சத்தார் தன்மை மிகப்பெற்று எரியினில் வேவாமை மட்டுமன்றிப் பச்சையாயும் விளங்கிற்று என்க. இன்னும், அவ் வெட்டுமூர்த்தகளுள் நீரும் ஒன்று, காற்றும் ஒன்று; எனவே நீயும் நீரும் காற்றும் உடன்கொண்ட மூர்த்தமாகிய அட்டமூர்த்தத் தொகுதிப்பொருள் உட் புகுந்தது. அஃது ஊழித்தீயினையும் ஊழிநீரினையும் ஊழிக்காற்றினையும் உள்ளடக்கியது; அவ்வாறுயின் இத்தியினை அவிதல்வேண்டுமே எனின், அதனுள் தீயுமிருத்தலின் அவிந்திலது; இதனியினை அடக்கவல்லது அது தீ; "நெருபபையு மெரிக்கும்" (திருபுகழ்); ஊழித்தியை உள்ளடகிய நீயாகிய மூர்த்தம் இருகையே அகைகரும் நீயின் வடிவம் அளவுபடுதைப்பட்டு நிகழ்வது அவ் வட்டமூர்தத்தியின் செயல்; "அகில் மிகாமைவைத் தானுடல் வைத்தான்; எல்லும் காமைவைத் தானுல கேழையும், தகுமிகு காமைவைத் தான்றமிழ்ச் சாதகிரம், பொங்கிமி காமைவைத் தான் பொரு டானுமே" (பாயிரம் - 87) என்று திருமூலர் திருமந்திரம் இதனை விளக்குதல் காண்க.

மலைமகள்பாகத்து அட்டமூர்த்தியைப் போநுள் என உடைமையால்-எரியினில வேடு இடவேண்டியகாகிய "போகமார்தத பூணமுலையாள தனனெடும் பொன் அகலம்-பாகமார்தத - பரமேட்டி" (பதிகம்) எனற பாட்டு எழுகிய வேடு வத்து கோகதது; அதனை எரியிலிடில் பழுதிலை என்பது திருவருட் குறிபபென அருள்வழியே உணர்த்தனர் பிள்ளையார்; அதனுல அவவுணர்ச்சி கொண்டு "முலையாள் பாகமார்தத பரமேட்டி" என்பதறகு "மலைமகள் முலையிணையவை தலவலின் - எரியிடில் பழுதிலை என்று உரைகூறிய போதறி உலகுக்குக் காட்டியருளினர்; அவவாறு பிள்ளையார் காட்டிய நியாயதனினைப் பின்னும் விளக்கி முலை தலவலின் என்பதறகு முலைமலை மகள் பாகத் தட்டமூர்த்தியைப் போநுளென உடைமையால் என்று விரித்துரை செய்து காட்டியருளினர் ஆசிரியர். மலைமகளும் இறைவரது திருமெனி என்பது.

போகமார்த்த பூண்முலையாள் - பரமேட்டி - (திருவருட் குறிபபு); மலைமகள் முலையிணை யவை தலவலின் நள்ளாறர் நாமமே - (பிள்ளையார் அருளிய); மலை மகள் பாகத் தட்டமூர்த்தியைப் போநுளென உடைமை - (ஆசிரியர் உரை).

பதிகம் - தீயிடைப் பச்சையாய் விளங்கியது - பதிகம எழுகிய வேடு விளங்கியது என்பது கருத்து. இங்கு வாதத்தில ஒட்டிய பொருளாவது தீயினை வேவ் கொணடு சுடாதிருகுக பணணுதலன்று; அதனுள் இட்ட வேடு பழுதிலாது கினறு உண்மை காட்டுதலேயாம்; தீயினை வேவ்கொள்ளுந் தன்மை முனனரே பிள்ளையார் "சுடர் - பையவே சென்று பாண்டியற் காகவே" எனப பணிததமையாற் போந்து அறிய கின்றது; அதனை உட்கொணடுபோலும அமணாகளும் "மன்னுதம் பொருட் கருதது வாய்மைதீட்டி மாட்டினுல், வெக்கெருப்பில வேவுறுமை வெறறி" (2675) என்று ஒட்டினர்; "அகித்தம் பனைவலலார்க் கனல்சுடா தாகும்" (சித்தி - 10-5) என்றபடி தீயின் வேதனை தம்மாட்சிச் சாராது செயதல் சில சாதனைகளால் ஆகும். இது சமணா அறிந்த கலைகளுள் ஒன்று எனபது "அதிசயமன் றிதுமுன்னை யமண்சம யச் சாதகத்தர, லிதுசெய்து பிழைத்திருந்தான்" (1367) என்று பாடலிபுதிர அமணர், சீற்றறையில் அரசகள் பழுதிருது பிழைத்திருந்தபோது பலலவனுக்குச் சொன்னதனு லறியலாம்; எனவே அசேதனமாய் எரியுட்பட்டமரதிலையிற பழுது படுவதாய் உள்ள வேடு வேவாமை அதனுள் எழுகிய பொருளின் வாய்மைத தன்மையாகிய வலிமையாலாவது என்று காண்பது அவர் கருத்து; அதனுல் அவ்வலிமை எட்டினிற் காணவேண்டுவதாயிற் முதலின் நீச்சுடாது குளிர்ததென்று நீயின் செயலாகக்கூறுது பதிகம் - அட்டமூர்தியைப் பொருளென உடைமையின் தீயிடைப் பச்சையாய் விளங்கிய" தென்று, பதிகப் பொருளின் செயலாகக் கறிஞர் என்க.

ஆயின் ஈண்டுத் தீயிற் பழுதுபடாது நிற்கும் வாய்மையின வலிமையினை அவ் வேட்டினில் எய்தவம் கண்டுகொண டருளினர் எனின், ஏட்டினைக் கண்டனர் ; அதனுள் "பூண்முலையாள் பாகமுடைய பரமேட்டி" - என்ற சொற்றொகுதி கண்டனர்; அதனுள் அதன் பொருளாகிய கள்ளாறனையும், அவன் அருள்முலையாளொடு குலவின அட்டமூர்த்தமாகிய உடம்புடையான் என்பதனையுமே கண்டனர்; அவ்வேட்டினை அவ்வாறே கருதுதல (பாவனை) ; அமுகியமறிதல (தியானம்) ; ஆணையிடுதல (மந்திரம்) என்ற செயல்களை அவவணணமாகினர ; " முலையோடு குலவலின் " என்றது பாவனை ; "நாமமே" "மெய்ம்மையே" என்பன தியானம் ; " எரியிடிலிலை பழுதிலே" என்பது ஆணையாகிய மகிரம். எனனை ? " கிறைமொழி மாதர ராணையிற னினைத, மறைமொழி தானே மகிர மெனப " (தொல). அவவேட்டினை எடுதத இவ் வாறு பகிகப பகிஞெரு பாட்டாலும பகிஞெரு முறை தியானித்தும அபிமந்திரித்தும் அருளுருவாக்கிக கொண்டதனால அவவேடு அதனமையே பெறறதென்க. " கண்டதோரு மந்திரந்தாற் காட்டதகி லாகவே, முண்டலபோ வின்றுங் குனதர் மாந் - கண்டவருத, தானதுவா யனருனை ருனதுவாய்த் தோன்றுனே, தானது வாய்க் காணுந் தவர்க்கு " (12 - 3 - அதி - வெணபா) எனற தாபரதநினகட் வெ வழிபாடு செய்க என விதிககும வெளுானபோத உணமை ஈண்டுச் செநித்துணரற பாலது; இவவாற்றுற வெம வெளிப்பட்டமையால அவவேடு வெறுருவாகிய எரியிடை அமைந்துபட்டதெனக. " மரததை மறைதததி மாமத யானை...பரதநின மறைந்தது பார்முதற பூதமே " (திருமுக - 8 - பராவதனை - 23) எனறபடி இருகு கள்ளாறா நாமமேயாகிய பொருளியலபே வெளிபபட்டு, எழுததாகிய சொல்லும வடிவ தோறறப படாது நின்றன.

மட்டுலாம் குழல் - இயறகையாகிய மணததையுடைய குழல்.

பட்ட தீயிடை என்ற வேறு பிரிதது, வளர்க்கபபட்ட எனறுரைப்பாருமுண்டு. அன்றே - அசையென றெதகருவாருமுண்டு.

இனி, இபபாடிறகு மேறகூறியவாறனறி, " எரி அட்டமூர்தததங்களுள ஒனறு. அவ்வெரி ஆணடவனுருவம , இவவுண்மையை அநபூதியில உணராது திருவருள ஞானம் பெற்ற பெரியாரின திருவாகைகை கொணட திருபபதிகம் எங்ஙனம அழிந்த படும?" என்ற கருததரை கொள்வாருமுண்டு ; அருளஞானம பெற்ற பெரியாரின் திருவாகை எனபது பின்னோயாத எலலாப பதிகஙகளுககும ஒகுமு; அதனால இப் பதிகத்திறகுச சிறபபியலபு ஒனறுமிலலே. ஈணடு எரியில பழுதில்லாதிருந்தது பின்னோயார் திருவாக்கு எனபதனாலனறு ; " மலைமகள முலையினை குலவலின " - " அட்ட மூர்த்தியைப் பொருளென உடைமையால் " - என்ற பின்னோயார்தாமும் ஆரியருமு உணர்த்தியருளினமை கொணடுமை, இவவாறருளும, பிறவாறருளும் இக்கருததரை பொருந்தாமை கணடுகொள்க.

இனி, ஈணடு இத் திருபபாட்டின் மேற், விசேட ஆராயச்சியுரை எனபபட்டுத், திரிபுணர்ச்சியானும ஒருசாரபுணர்சசியானும், உணமைதானின் றட்பவுணர்ச்சி பெருமை யானும், வேணடபபடாதனவும், சைவசிததாந்தத்திறகு முரணபாடாயினவும், மயகை வைப்பனவுமாகிய பல பொருளகள வெளிபபடுததபபட்டுள்ளன. அவை பொருதத மற்ற ஆசார சீர்மையாகிய வெற்றரைளே என்ற வேறு ஒதுகதத்தக்கனவே யாயினும், சைவநூல்களின் உணமைத நிறத்தின் அநுபவமில்லாதாரை மயகவைக்குமாத லின் அவைபற்றி ஈண்டுச் சில கூறறல தகுமெனாகும்; அவர் கூற்றுவன:—"உயிரானேத் திருஞானத்துடன் சம்பந்தபபடுதலும் ஒருவர் குரு எனப்பவோர் - திருஞான சம்பந்தர்

உலகுக்கு ஒரு பெருங் குருவாக வீற்றிருப்பவர். அவருக்குப் பல மொழிகளில் பல பெயர்கள் உண்டு. மொழியளவில் கிறபோர் அவரை வெவ்வேறு புருடராக உணர் கிறார் ; உண்மைஞானம் கைவரபபெறறோர்க்கு அவர் ஒருவரே என்பது விளங்கும் ;

திருஞான சம்பந்தரைச சூழ்ந்து அவர்தம் எவல்வழி நிற்கும் குருமார் பலர் வீற் றிருக்கிறார் ; உலகில் எல்லைகளே திருவருள் நெறிமீது மாசு படிகிறதோ அவைகளே அம் மாசினைப் போக்கித் திருவருள் நெறியை விளகைச் செய்யத திருஞான சம்பந்தர் போதருவர் ; இல்லையேல தம்மைச் சூழ்ந்துளள குருமாருள் ஒருவரை அனுப்புவர்" - என்றும்,

"ஆண்டவன் ஒருவன் ; அவன் அருள்நெறியும ஒன்றே ; அவவொன்று ஒவ் வொருபோது ஒவ்வொருவிதப பெயா பெறவதாகிறது ; அப்பெயர்கள் பல சமயங் களாக ஆராய்ச்சி யில்லாதவர்களாற் கொள்ளப்படுகின்றன ; பலபட்ட பெயர்களை நீக்கிப பொருளைப பாராததால ஒருமை புலப்படுமேயன்றிப பனமை புலபபடாது" - என்றும்,

"திருஞானசமபகதர் வருகைக்குக காரணமாயிருதது அக்காளிற் சமணமென்று பெயா பெறறிருதத திருவருள் நெறியில சோதத மாறுபாடேயாகும் ; ஆதிநாதராகிய விருஷபதேவர் கணட அருள்நெறி தோனறியவாறே இயலகியிருபபின் திருஞான சம் பகதா வருகைககு இடம நேர்ந்திராது" - என்றும,

'..ஆதிஜைனததிடைச சிறப்பாகத திகமபர ஜைனம் என்றும் சுவேதாம்பர ஜைனம் என்றும் இரணடு பிரிவுகள் தோன்றின. திகம்பரம் இயற்கையை வெறுப்பது; பெண்ணே இழிவாகக் கருதுவது ; பெண பிறவிககு வீடுபேறில்லை ; ஆணபிறவி தாமி யின்னரே வீடுபேறு எயதும் .. ..இவை ஆதிஜைனததிடன மாறபட்டவை ; இதற்கு உடன்படாதா சுவேதாம்பரர்கள் ; .....திகமபரா இயறகை நெறியினின்றும் வழுவினாகள் ; பெண்ணே இழிவாகக் கருதினாகள ; பெணணை வெறுத்தல பெருந் தவறு என்று கொணடாகள் ; இவர்களால் இயற்கை நெறிக்கும் பெண்ணுலகுக்கும் பெருகதன்பம் நேரதது.....இது இறைநெறிகுக கேடு சேர்வதாகும் ; இயற்கை இறையின் போாவை அதாவது உடல் ; அவவியற்கையை வெறுத்தது திறப்பது இறையை வெறுதததித அறபபதாகும. "உலகினி வியறகையை யொழித்திட்டு டற்ற வர்க் கற்ற கினுறை கின்ற வாலவா யாவது மிதுவே" (திருஞான சம்பந்தர்)" என்றும்,

"இயற்கையை உற்று நோக்கினால அது ஆண பெண மயமாயிருததல் விளகும் .....இயறகை நெறிககும் பெணணுலகுககும் இழுககு நேரும இடஙகளில் அருள்நெறி செல்லிய முறையில் இயங்காது...தெனனஞட்டில இகமபரததால் இயறகை நெறிககும் பெண்ணுலகுககும் இழிவு சேர்ந்தமையால் அவ்விழிவைப் போக்கவே திருஞான சம்பந் தர் தோன்றினார் ; அவர் அருள்நெறியாகிய ஆதிஜைனத்தை அழிக்கபபோர்தா ரென் பது ஆராயச்சியிலலாதா கூற்று" என்றும, "திருஞான சமபந்தரது திருவிரும்பூனைப் பதிகததில் "சமண் சாகிய மாக்கிய வாறே" என்றதனால் சமண் சாக்கியம் ஆக்கிய வன் சிவனே என்பது விளகுகிறது ; .....சமண சாகியம் என்பன அதன்நேறிக்கு வழங்கப்படும் பல பெயாகளுள் சேர்ந்தவை. ஆகவே வெனனல் ஆக்கப்பட்ட சமண் சாக்கியம் ஒழிக்கபடட் திருஞானசம்பந்தர் முயல்வாரோ ?" என்றும், "...வெனனம் சமணத்தக்கும் சைவத்தக்கும் பொதுவானது. சமணமும் சிவநெறி ; சைவமும் வெ நெறி. சிவநெறி எனனும் அருள்நெறி ஒவ்வொருபோது ஒவ்வொரு பெயர் பெறவது வழக்கம்" என்றும், ..."வொஹொர்தி" (குர்தருர்தோச்சாரியர் அஷ்டபாகு

டம்) ; "சிவசுகம" (பூபால ஸ்தோத்திரம்) ; "சிவகதியடையலாமே" (சித்தாமணி) ; "சிவகதிநாயகன்" (சிலப்பதிகாரம்) ; "சிவகதியின் அமர்நதிருந்தார்" (மேருமந்தர புராணம்) ; "மூவெயிலின் முரண்முருக்கி...கெருபபுயிழ் கெடுகோக்கினை...கொடுஉ கூற்றைத் தான்வலியின் விழ வுதைததனை ; மூன்று கணமுனித தலியினை...கினளுள் னேசீ யொடுக்கினை...கின்னின்று சீ விரிதததனை ; ...ஆதி பகவனை அருகனே" (திருக கலம்பகம்) என்ற சமண தல்களுள் வருவன...எனறும் ..." இயறகையானது ஆண் டவன் உடல்; ஆணடவன் பெண்ணெடு கூடியுள்ள பெருத்தகை என்பது பொதுளவே திருஞான சம்பந்தர் திருப்பதிகங்கள பாடியுள்ளார்...உலகில் பெண் ஆண் கூட்டுறவு என்னும் பேரதம், இயற்கை-இறைவின் வழியது என்பது திருஞான சம்பந்தா உள்ளக் கிடக்கை ; ..."பொறியைம் புலதினை வேட்கைநோய தீர்கரும மருந்து..." என்றும், இவ்வாறு வருவன பலவாம்.

இவறறின் பொருததகளைச நிறித ஆராயவாம் : (1) திருஞானசம்பந்தர் என்பது மூலருரு - இறைவா - என்ற காரணபபொருளபட மயங்கி யறியலவாதது பிழை; (2) பினனா அப பெயரசொலலியே ஆளுடைய பிளளையார பெயராக வைதது பேசியது மயககவைததலாம ; (3) அருளநெறிகரு மாச படியும்போதெல் லாம் அனைய போககத திருஞான சமபந்தா வருவா அல்லது அவரைச் சூழந்துள்ள குருமாருள ஒருவரை அனுபபுவா எனறது சைவசமய உணமையாகிய நிதாகாததறகு முறறும மாருபய பெரும பிழை ; (4) அருளநெறிசகு மாசு படியாது. அவ்வாறு மாசு படிதல் சைவததல இலலை ; திருஞான சமபநதா எனபது ஆதி குருவாகிய ஞான இறைவா என்ற கொணடால அவருகரு கம்போல உலகில்வரும் அவதாரநிலை பேசுதல் சைவ சமயக கோட்பாட்டுக்கு முற்றும மாறுபாடு; வைணவ மரபில அவ்வாறு பேசுதல அமையும், அவர்கள் கடவுள் அவதாரம என்னும் பிறபபில் வருதல் அவாதம் மரபுக் கொள்கையிற பேசப்படுதலால்; ஏனைப் புததம - நிறிததல முதலிய சமயங்களிலும் அஃதொகரும ; சைவதநிறகேறறமை யுணரதகொளக ; (5) திருஞான சம்பந்தர் என்ற பெயருக்கு உயிரகளைத திருஞானததுடன சமபநதபபடுத்தும ஒருவர் குரு எனப பட்டுப் பெருக் குருவாவர் எனறது பிழை ; இப பெயர்பபொருளை ஆளுடைய பிளளை யார் புராணம் விளக்குகின்றது. உலகத தநதை தாயாகள் சிவஞானததை ஊட்ட உண டருளியமையாலும், கலைஞான மெயஞ்ஞானகளை முறற உணாநதமையாலும் இப் பெயர் போநததென்பது ; 1966 - 1967 பாட்டுகளை பாகக. இதறகு ம'ருகப பொருள் கொளுதல் பிழையும் மரபு வழுவுமாம , அவவாறு கொளளறகு இலகணமு மில்லை. "எப்பொரு ளெச்சொலி னெவ்வா றயாந்தோ செபபின ரபபடிச செபபு தல் மரபே" என்ப நிலக்கணம ; (6) இறைவன ஒருகாலதது நிரிடத்து வருவோ னல்லன் - எஞ்ஞான்றும் எவவிடதது மவவொரு கணமும உட்னினறு உலகினைத நிருத்தி உயிர்களை மாசறறுக்கினருள் என்பது உணமைனுற றுணிபாம ; (7) ஆணட வன் ஒருவனே என்பதொக்கும ; ஆனால அவனருளநெறியும ஒன்றே என்பது சாலாது ; அஃது குழறுபடையானதொரு மயக்கம ; ஆணடவன ஒருவனேயாயினும் உயிரகள பல. அவை பலப்பல பக்குவமுடையன ; என ? ஒரோருயிரும ஒரோ நிறமும பக்குவமுமுடையதாம் என்னலாம். அவ்வுயிரசளின நிறமும பகுவமும கோகுபப பல நிறப்படுவன இறைவனருளும் முறைகளும் நெறிகளுமாம ; அருணெறி முடிவில் வீடுபேருயிய ஒன்றையே கருதினும் உபாயகளும் சாதனைகளும் மிகப பலவாம ; அருணெறி ஒன்றே என்றும், அஃது ஒவவொருபோது ஒவவொருவிதப பெயா பெற மென்றும், அப்பெயர்கள் பல சமயஙகளாக ஆராய்ச்சி யில்லாதவர்களால் கொள்ளப் படுகின்றன என்றும் இவ்வாறெல்லாம் பேசுதல் முழுக் குளறபடையான மயக்கம.

சமயங்கள் பலப்பல, அவை உயிர்களின் பகருவபேதம் நோக்கி அவ்வவற்றை வழிப் படுத்த இறைவன் வகுத்தனவேயாம். "சமய கோடிகள் எல்லாம்" "சைவ முதலா மளவில் சமயமும வகுத்த" என்பன பெரியார நிருவாககு. ஆதலின் சமயங்கள் எல் லாம் ஒன்று என்றும், புறத்தோற்றம் மட்டும் வேறுபடுவன என்றும சொல்வன எல் லாம் பிழை சைவம் எலலாச் சமயங்களினும் படிமுறையின வகுத்துத் தன்னுள் அடக்குதலால் இதனுள் எலலாச் சமயங்களும அடஙகும; இஃத ஒன்றினுமடங்காது. ஏனைச் சமயங்கள் தாமறிந்து சென்ற அளவில் ஒருசில உணமைகளை மட்டும் காட்டு வன. சைவம முழு உணமையினையும காட்டும்; சமணமும், புத்தமும, இனியும் "விரி விலா அறிவினர்கள் வேறொரு சமயஞ் செய்தே, எரிவினற சொனனு ரேனும்" அவை யெல்லாமும் தனனுள அடஙகுவது சைவம்; ஆனல் அவை யெவையும் ஒவவோர் பகுதி மாததிரையானனறி முழுமையாகிய சைவமாகா, "கணணிலலா பலர்குழீஇக் கொணடு வேழ நினறுழிததலேபபடடுக் கையிறற றைவகது வேறு வேறு கூறு மிலக கணஙக ளெல்லாம, கணணுள்ளா ளொருவனகணடு கூறுமத னிலககணதது எகதேச மாயகதாணபடட டடஙகு மாறுபோல, ஏனைச் சமயநூலா தததநு ரிறறறிவுகளுப் புல னுயவாறு பறறி அவ்வந்நூல்களிற் கூறும பொருளியல்பு களெலலாம், முற்றுணா வுடைய முதல்வனுற செய்யபபட்ட வேதாகமஙகளிற கூறும பொருளியல்பின ஏக தேசமாய்க் காணப்பட்டு அவறறு ளடஙகும" எனவும, "நூலெனபபடுவனவெல்லா மொரு கிகரனவாதலினறி, முதனூல, வழிநூல, சார்புநூல, பூருவபகக நூலெனப் பல வேறு வகைப்பட்டு மேன்மேல் நூலகளே நோகஙகி ழெழுகீழ நூலகள் மென்மையுடை யனவாம்; அவறறுள் ஏனைச் சமய நூலகளெல்லாம முதனூலாகிய வேதாகமப பொருளே முழுவதுமுள்ளவா றுணரமாட்டாதா அவற்றுட் சில பொருளைச் சமுத்திர கலை நயம்பறறி ஆணடாண் டெடுதது்கொண்டு தததமறிவளவுக்கேற்பத தொகுத் தம் விரித்தஞ் செய்த நூலாகலான, அவையெல்லாம் பூருவபக்க நூலெனப்படும்" எனவும் வெளஞான சிததியார 8 - 13 - 14 பாட்டுகளின்கீழ் எம் மாதவச் சிவஞான முனிவா கூறியவை ஈண்டுச் சிநதிக்கதபாலன, (8) இனி, ஆதிகாதராகிய விருஷப தேவர் கணடது மாசறற அருணெறி எனறும, அநத ஆதிஜனததினை சில மாசுகள் படிந்தன என்றும, அவை இயறகையை வெறறுதது துறவு பூணடதும், பெண்ணை இழி வாகக் கருதவதும என்றும் பலபல எழுதபபட்டன; உணமை அருணெறியாயின் அதனில் மாசு சேராது எனபது முன்னர்க காட்டபபட்டது; இயறகைநெறி என்பது பொருளறறதொரு சொற்றொடர வழக்காமை. "உலகினி லியறகையை ஒழித்திட் டறறவர்க கறறிவன்" என்பதறகு கொணட பொருள் பிழை. உலகினிலியற் கையை ஒழித்திட் டறறவர் என்றது உலக பறறுகளினின்ற விடுபட்ட மனமுடை யோர எனறும், அற்றசிவனி - அவர்க்கு அவ்வறறதலின்கணணே வெளிபபட்டருளும் இறைவன் என்றும் பொருள்கொளளகிடந்த இவர்க்கு நோமாறுக உள்ள நிருவாக்கு ஆகும். "யானெனதென றற்ற வீடமே நிருவடியாம்" (குமரகுருபர்); (9) பெண் பிறவியைச் சமணா இழிததமையால் அதனை ஒழிகக்த நிருஞான சம்பந்தா தோன்றி ஞர் என்பது பொருததமறற மொழி; மகளிரிழிவு - துறவின் மேன்மை முதலியவை சைவத்திலும் பேசப்படும்; ஆண்பிறவியோ பெண்பிறவியோ இரணடும், பிறவி என்ற அளவில் முதலிக் கிடையுரியன; ஆணஉயிரென்றும பெண்ணுயிரென்றும் வேற் றுமை உயிரினுள் இல்லை; பிறவிகளுள் ஒன்றினை உயர்தலியும் ஒனறினைத் தாழ்த்தியும் கூறுதலும் சைவமன்று; பெணணின்பெருமை பேணத் திருஞான சம்பந்தா தோன்றி யருளினர் என்பது பெரும்பிழையேயாம். பெணணேயாக ஆணேயாக அன்புநெறி யினையே சைவம் போற்றி எடுததது; பெண்ணை உயர்தலிப் போற்றிய இடமுமுண்டு;

தாழ்த்தி ஒதக்கிய இடமுமுண்டு. இவ்வுயர்வு தாழ்வுகள் அன்பினைப் பற்றி எழுந்தனவேயன்றிப் பிறவியினிலே பற்றி எழுந்தனவல்ல ; பிண்ணியாரது சமண வாதத்துக்கும் பெண இழிவோ உயர்வோ என்ற இதற்கும் சமயதத்துவத்திலே ; சைவத்திற்குச் சமணர் சூழ்ந்து செய்த கேடுகளைப் போக்கித் திருநீறுமற்ற ஒதுக்கித் தாபிதத்திலே இவ்வாதனைகளின் கருதுதாதல காண்க ; (10) சமணத்தை அழிக்கத் திருஞான சம்பந்தராவது, அரசுகளாவது வேறு எதைச் சைவ ஆசாரியராவது முற்படவில்லை ; சமணர் சைவத்துக்குச் செய்த சூழ்ச்சிகளையும் கேடுகளையும் ஒழித்ததை தற்காப்புமட்டிற செய்தனர் என்க ; (11) சமண-சாக்கியம் முதலியவையும் இறைவனுல உயிர்களின் பக்குவ பேதம்பற்றி ஆக்கப்பட்டன; ஆதலின அவற்றை அழிக்க பிண்ணியார முற்படார் என்றனர ; பாம்பு-தேள்-புலி - நீ-முதலியவையும் இறைவரால் ஆக்கப்பட்டன என்ற காரணத்தால் அவற்றை எடுத்துக் குலவுவார உண்டோ ? அவற்றைக் காட்சிச்சாலியில் அவ்வவற்றனவில வைத்த அமைவுபடுத்ததிலே முறையாம். சமணம் இறைவனுல் ஆக்கப்பட்டமையால அதவும் சைவமும ஒன்றுமோ ? பசவும் பாம்பும் ஒக்க இறைவனுல படைக்கப்படினும ஒன்றுகாதவாறு இலையும் கொள்ளப்படும ; (12) இவர்கள் சிவம் சிவகதி என்ற சத்தங்கள சமண நூலகளுள வருதலாகாப பெருமுயற்சி செய்தெற்றனர ; இது பயனில முயற்சி எனறெழுக. சிவம் - சிவகதி முதலியவற்றிற்கு அவர கொள்ளும பொருள வேறு ; சைவம கொள்ளும பொருள் வேறு. பொருளொற்றுமையினறி வெறும சொனமாத்திரை கொண்டு மயங்குதல் முறையன்று ; (13) வேத வொமங்களிற போற்றப்படும சிவனையும் ஏனைக கடவுளா-றெ தெய்வங்களையும் ஒன்றுகவைத தெணணுதல் பெரும் பிழை ; சைவத தெய்வப் பரமாசாரியார்கள் ஏனைச் றெசமயங்கள்-போலிச சமயங்க-ளென்றிவற்றின் குருமார்களுடன ஒன்றுக வைத்துப பேசுதல உய்தியிலலாத பெரும்பாவமும் சிவாபராதமுமாம் ; " மூவரென்றேயெம் பிரானெற மெணணியிண ணுணடுமணமேற, றேவரென் றேயிறு மாந்தெனன பாவர் நிரிதலரே " (திருவாசகம); " சிவனே டொருகுர தெய்வர் தேடினு மில்லை, அவனே டொபபாரில கியாரு மிலலை " (திருமாகிரம), (14) சமயங்களைப புறபுறம - புறம - அகபுறம - அகம என நிலவகையாக வகுத்த அவற்றுள ஆருகதம் என்னும சமணம சீவன முதலாகப பதாாதத்கள ஏழு கொளவதெனறும, இவ்வெழுவகைப பதார்த்தத்களும உணடாம - இலலையாம - உணடுமிலலையாம எனபனமுதலாக எழுவகையால கூறபபடும அனேகாந்த வாதத்தைக கொணடதென்றும், வேத சிவாகமங்கள உணமை நூறகளே உடம்படாத மாறுபடுவதென்றும, கணட நம் பெரியோர் அதவும, அதபோனற பிறவும உயிர்களே உண்மை காணமாட்டாது மயக்காத வண்ணம் நியாயக காட்டி மறுதது அப பரபக்கம் கூறிச் சைவதது ண உணமையை நாட்டினர்; இது பற்றியே ஆரியரும் " தெளியா தொருபொருளே பொயயுமெய்யு மாமெனனும் புரை தெரியார " எனறு இதன கருதத்தினை வடிதத்தக கூறியருளினர் ; இவறறையெலலாம் விட்டுச் சைவததோடொபப ஆநிசமணம மாசறற அருணெறி யென்றும, பிறவாறும மேறகூறியபடியெலலாம பிதறறிப பொலிச் சமரசம காண முயலும உரையெலலாம் பட்டப்பகலில் காகதை வெளிதென்பது போனற வெளிற்றுரையேயரமென்ற விடுக்க.

முன் அரசுகள் புராணம் 1560-ல் கீழும், பிறண்டும் உரைததனவும, இனியும் ஆண்டாண்டுரைப்பனவும் கணடுகொள்க.

இனி, முன்னர்ச் சுரந் நீராததற்கும, பின்னர் நீரில் வெல்வதறகும் தனிப் பதிகங்களினுல் அருண்மேற்கொணடாறகுச் செய்யாது, இறுதி திருமுறையினை மதித்தெடுத்து வந்த எட்டினைப போற்றித் நீயில் இட்ட கருததென்னையோ ? எனின் :

அவ்வாறு செய்தருளுவதற்ற திருவருட் குறிப்பு எம்மா லறியும்தரமன்று; "ஆட்பா லவர்க் கருளும் வணணமு மாதிமாணபும், கேட்பான்புகி லளவில்லி னெக்க வேண்டா" என்பத ஆனை; ஆயினும் ஒன்று கருத உள்ளதனை ஈண்டு அச்சத்துடன் குறிக்க நினைக்கின்றேன்: முன் செய்த சுரநதிதத செயல் சமயவணமை காட்ட ஒட்டிச் செய்த வாதமன்று; அரசன் கோயின் மிருதியால் "சீதகள் தேறிய தெய்வத் தன்மை யென்னிடைத தெரிபபீர்" (2657); "இகலித நீரும்" (2659) என்று கூறிய அள விலன்றி அத பினனேயார் முறபட்டுச் சமய வாததநிற் றுணிந்த வாதமன்று; அத போலன்றிப் பின்னேயார் "பேசுதிர நும்பொருள் எல்லி" என்று வாததநில் அழைக்க, அமணர் வாய்மை ஏடு கெருப்பில் வேவுறுமை வெற்றியாரும்; அத கட்புலத்திலுய்ப பத என்று ஒட்டினராக, அதன்படி அணிதது வாய்மை கிலகாட்ட எழுதத அவ்வாத மாதலின் தாமாத துணிந்து செய்தலினறி இறைவ ரருட்குறிப்பினேயே கைக்கொண்டு செய்தல் தருமென்பத பின்னேயாரது நிருவுள்ளகங்கிடைபோலும் என்பது கருதப் படுவதாம்; பின்னாப புனல்வாதத்தில், இவவாறு முன்னாத நீயினில் நிகழணட வாய்மையினைப் பாணடியனுக்குத தேற்றி ஞாலேபதேசம செயது ஆட்கொள்ளும வகையாற் றிருபபாசுரம் பாடபபட்டதெனபதும் கருதப்படும.

எய்திய சேந்தமிழ்ப் பதிகம்—எனபதும பாடம. 786

2685. மைய னெஞ்சுடை யமணருக் தம்பொருள் வளைந்த
கையி லேட்டினைக் கதுவுசெந் தீயினி லிடுவார்
'உய்யு மோவிது ?' வெனவுறுங் கவலையா மூணர்வால்
நையு நெஞ்சின ராகியே நடுங்கிநின் றிட்டார். எஅஎ

(இ - ள்) மையல்...இடுவார் - மயககததைக கொண்ட மனமுடையவாகளாகிய அமணர்களும் தமத சமய உண்மைப் பொருளே எழுதிய தமத கையிறகொணட ஏட்டினை வெப்ப மிக்குக் காய்கின்ற நீயிலே இடுவார்களாகி; "உயயுமோ இத ?"... உணாவால - இத நீயினில வேவாத எனுமோ எனற பொருள்திய கவலை கொணட வுணர்வினாலே; நையும்...இட்டார் - அழிகின்ற உள்ளதினின் புடையவாகளாகியே நடுகினின்று நீயினிடை இட்டனர்.

(வி - ரை) நடுங்கி நின்று இட்டார் - பின்னேயார் மகிழ்ந்து முன் இட்டார் (2683); அதபோலன்றி அமணர் திருவருள் வலிமை பெருமையினால் நடுக்கமுடன் இட்டார்கள்.

மையல் - மயக்கம்; பொய்யை மெய்யாக்கிகொள்ளும் மாறபாடு; இஃத அவர்க்குச் சமயக் கோட்பாடுபெற்றிய இயல்பால் வநதது; கவலை-ஈண்டு ஏடு உயயுமோ-உய்திபெறுத நீர்த்த சமயத்தை இழுக்கிவிடுமோ என்ற பயத்தால் அப்போத வந்த மனநிலை; நையும் நெஞ்சம் - நைதல்; கவலையால் சேரும் மன அழிவு; நடுக்கம் - அதனால் வரும் மெய்ப்பாடு.

தம்பொருள் - தமத சமய உண்மைப் பொருட் கருத்தின் வாய்மை (2675); வளைந்த ஏடு - கையில் ஏடு என்ற தனிததனிக் கூட்டுக.

கதுவுதல் - சுட்டு அழித்தல்; அடுதல்; இன்புக் கதுவு சேந்தீ எனவும், முன்னர்ப் பின்னேயார் இட்ட போத அமர்ந்துபட்ட தீ (2684) என்றும் கூறியவை சரிதவினவுக் குறிப்புப்பட வைத்த அமைதி காண்க.

நடுங்கி - தமத அச்சம் - கவலையே மறைத்தாராயினும் மனமழிவு மிருதலின் மெய்ப்படுக்கமாகிய புறச்செயல் வெளிப்பாடு பெற்றத எனக. 787

2686. அஞ்ச முன்னத்த ராகிய மறிவிலா வமணர்
வெஞ்ச டர்ப்பெருக் தீயினில் விழுத்திய வேடு
பஞ்ச தீயிடைப் பட்டது படக்கண்டு பயத்தால்
நெஞ்சு சோரவும் பீலிகை சோர்ந்திலர் நின்றார். ௧அ௮

(இ - ள்) அஞ்சும்... அமணர் - பயங்கொண்ட மனதை யுடையராயினும் அதனால் அறிவு பெறுத அமணர்கள்; வெஞ்சடா...ஏடு - வெவ்விய சடரினையுடைய, நீயிலே வீழ்த்திய ஏடு; பஞ்ச...படக்கண்டு - நீயினிலே பஞ்ச வீழ்த்தால் பட்டொழிவதுபோல ஒழிந்துபட்டது கண்டு; பயத்தால்...நின்றார் - பயத்தினாலே மனம் சோர்வடைந்த பின்னும் கையில் ஏற்றிய மயிற்பீலிக் கற்றையைக் கைசோர விடாதவராகி நின்றனர்.

(வி - ரை) அஞ்சும்..அறிவிலா - தமது சமய உண்மைகளும் தமது புனைவுகளும் வெறறி பெறு எனற கண்டு அஞ்சினார்கள்; ஆனால அவ்வச்சத்தினின்ற தெளிய வேண்டிய அறிவினேப பெருதொழிந்தனர்.

விழுத்திய ஏடு - அசட்ட காரணமாக ஏடினே வீழுமபடி செயதனரேயன்றி ஒழுஙகுபெறப புருதலிடமாட்டாத நிலே எனபது குறிப்பு.

பஞ்ச தீயிடைப்பட்டது பட-பட்டது - பட்டதுபோனற அழிந்த நிலே; பட்டது-பெயர; ஆருபெயராய்ப பட்ட நிலையைக குறிதததது; இரண்டனுருபு விரிக்க; படுதல்-பெறதல; அழிதல எனறலுமாம; இப்பொருட்குப பட்டதுபோலப பட என உவம வருபு விரிக்க.

பயத்தால் நெஞ்சு சோர - எட்டினைத நீயில் இடும் முன்னர் உய்யுமோ என்ற ஐயப்பாட்டின வலியினால அசசம் மட்டும் இருநதது. இப்போது அவ்வேடு உய்யாது ஒழிந்தமை கண்டுகொண்டாராதலின பயம மிகுதியினால மனம சோரந்தபட்டது; பயம் - மிகை அசசம; இது வேவுருமை வெறறியெனறும, வெந்தபட்டது வாய்மையன்ற எனறும ஒட்டிஞராதலின தோலவி வருதமையும் அதனால அரசனிடம் தொடர்பு பற்றிய பயனகளெலலாவறறின இழபபும, நிலேயழிவும நேர்வதனேயும எண்ணியதனால் உணடாகியது; பயம் - இதன வினேவு எனறலுமாம்.

நெஞ்சு சோரவும் பீலிகை சோர்ந்திலர் - பீலி - சமயகுறி; மனஞ்சோர்வுபடினும தறகணமையால் அதனே மறைதது பீலியைக் கைவிடாது நின்றார்; உண்மை கண்டபோதும் பொயபபட்ட தமது சமயக் கொளகையை விடாது பறறிக்கொண்டு என்றதும் குறிப்பு. சோர்ந்திலர் - சோரநிலராகி முறறெச்சம்; முற்றுக உரைபபினு மிழுக்காது.

நின்றார் - தோல்வியை ஒப்பித தாழாமலும அகலாமலும் நினறனர்.

பஞ்சுதியினில்—என்பதும் பாடம். 788

2687. மான மன்னவ னவையின்முன் வளர்த்தசெந் தீயின்
ஞான மூண்டவ ரிட்டவே டிசைத்தநா ழிகையில்
ஈன மின்மைகண் டியாவரும் வியப்புற வெடுத்தார்
பான்மை முன்னியிற் பசுமையும் புதுமையும் பயப்ப. ௧அ௯

(இ - ன்) மானமன்னவன்...ஏடு-ஞானபோனகராகிய பின்னேயார், பெருமையுடைய பாண்டியனது சபையின்முன் வளர்க்கபபட்ட நீயிலே இட்ட ஏடு; இசைத்த...கண்டு-குறிப்பிட்ட நாழிகையனவில் அழிவுபெறமல் நின்றதனேக் கண்டு; பான்மை...பயப்ப

முன்னையினும் பசிய தன்மையும் புதிய தன்மையும் உளதாயிருக்க; யாவரும் வியப்ப எடுத்தார் - எல்லாரும் அதிசயிக்கும்படி நீயினின்றும் எடுத்தருளினர்.

(வி - ரை) மான மன்னவன் - மானம் - பெருமை; ஈண்டுக் கொள்கையின் பெருமைபெற்ற கிலை குறிதந்தது.

அவையின் முன் - அவையின் முன் வளர்த்த என்றும், அவையின முன்இட்ட என்றும், அவையின் முன் எடுதார் என்றும் தனித் தனி கூட்டி யுரைததுக்கொள்க.

நீயின் - நீயின் இட்ட என்றும், நீயினின்று எடுத்தார் என்றும் அவ்வாறே தனித் தனி கூட்டுக.

இசைந்த நாழிகை - இத்தனை நாழிகை வரை வேவாதிருத்தல் வேண்டுமென்று குறித்துக்கொண்ட காலவெல்லை. ஈனமின்மை - அழிவுறுமை.

பசுமைப்பான்மையும் புதுமைப்பான்மையும் எனை. முன்னையினும பயததல்- அதிகரிததல - மேம்படுதல். பசுமை-ஏட்டின்பாலும, புதுமை - அதில எழுதிய பொருளின்பாலும கொள்க. பசுமை-தினமை , நீயிறபடும எனைய பொருள்களபோலனறி வறட்சி நீங்கிப் பசுமை பெற்ற கிலை; இதனால் இதறகுப பசசைப் பதிகம் என்ற பெயர் வழஙகும். "தான செயத-பச்சைப் பதிகந் தடனபதினு ருயிரம பா, விதனப போநனே வினைக்கவல பெருமான" (ஆளுடைய பிள்ளையா திருததொகை) எனற சமபியாண்டா சுமபி திருவாகுமு காண்க. இதனுள பாவித்துப் போநனே வினைக்க வல என்ற கருதது ஈண்டுச் சிநதிக்கத தகுகது. "பசசையாய் விளஙகிய தனதே" (2684).

புதுமையாவது அவ்வேட்டில் எழுதிய பொருள் முன்னாப் பொதுவகையால் இறைவனது பொதுலியல்பு கூறிய கிலையில் அறியபபட்டது. இங்கு இவ்வாலாற்றின் ஒருடர்பினால் சிறப்பாகவும் அவனது சிறபபியலபுபற்றிய கிலையிலும அறிந்து வழிபடப் பெறுவது.

பயப்ப - பயனுகப பெற; பயப்ப எடுத்தார் - எனை. வியப்பாவது - அழிவின்மையோடு முன்னையினும பசுமையும் புதுமையும பயபப வினைதல.

பான்மை - பான்மையினால்; தெயவத தனமையினால என்றலுமாம். 789

2688. எடுத்த வேட்டினை யவையின்முன் காட்டியம் முறையில்
அடுத்த வண்ணமே கோத்தலு மதிசயித் தரசன்
தொடுத்த பீலிமுன் றாக்கிய கையரை நோக்கிக்
"கடுத்து நீரிட்ட வேட்டினைக் காட்டுமி" னென்றான். எகூ0

(இ - ன்) எடுத்த...கோததலும் - (தவ்வாற நீயினினறும்) எடுத்த அவ்வேட்டினை அரசனவையின் முன்னே காட்டி, (முன்பு கழறறிய) அம்முறையினாலே மீளப் பொருந் தும்படி சுவடியினுள் கோததலும்; அரசன் - பாணடியன்; அதிசயித்து - அதிசயம கொண்டு; தொடுத்த...என்றான் - கறையாக கட்டிய மயிற்பீலியை ஏந்திய கை னையுடைய அமணர்களைப் பார்த்துக் கோபித்து நீர் நீயில் இட்ட ஏட்டினைக் காட்டுங் கள் என்று சொன்னான்.

(வி - ரை) எடுத்த ஏடு - நீயினின்றும் வியப்புற எடுத்த ஏடு; விளக்கம் போற் றல்பெருநிருத்த நிருநீற்றின் நிறத்தினை மேல் எடுத்த என்ற குறிப்புமாம்; "எடுத்த பொற் பாதமும்" (தேவா); "எடுக்கு மாக்கை" (புரா).

அவையின் முன் காட்டி - போவை காண - இட்டாராதலின் (2683) அஃத பழுதின்றி எடுக்கப்பட்டமையும் அந்த அவையோர் காணும்படி காட்டி.

அம்முறையில்-கோத்தலும் - சுவடியினின்றும் கழற்றிய அவ்வண்ணமே எடுகள் முன் வரிசையிற் பொருத்தும்படி கோத்தல் வேண்டும் என்பது.

பீலிமுன் தூக்கிய - செஞ்ச சோரவும் அச்சோர்வு புலப்படாத மறைத்துப் பீலி கை சோராத ஊக்கங்கொண்டார்போலத் தூக்கிப பிடித்த என்க; முன் - விளக்கமாக; தூக்குதல் - பலருமறியும்படி உயர்த்தல்.

கடுத்து - கோபித்து; கடுத்து - இட்ட என்ற கூட்டுக. "முகம் கோபத்தீத் தள்ளியெழு மெஞ்கண்கள் சிவந்த" (2653); கடுத்து - என்றன் என்ற கூட்டி, மன்னவன் செயலேபபறறிக் கூறதலுமாம்; முன்னரே "என்னவா தமக்கு" (2674) என்ற கூறியதும், அரசன் அதன்மேல் ஒன்றரைக்குமுன் பின்னோயார் நடுத்த மேற் கூறியருளியமையும் காணக.

காட்டுமின் - இகழச்சிக குறிபபுபபடக் கூறியபடி; "எய்திய நகையினேடும்" (2690) என்பத காணக. கையர் - வஞ்சகர் என்றலுமாம். 790

வேறு

2689. அருகர்தா மிட்ட வேடு வாங்கச்சென் றணையும் போதிற்
பெருகுதீக் கதுவ, வெந்து போந்தமை கண்ட மன்னன்,
தருபுனல் கொண்டு சென்றீத் தணிப்பித்தான்; சமண ரங்குக்
கருகிய சாம்ப ரோடுங் கரியலான் மற்றென் காண்பார்?; ஈஈஈ

2690. செய்வதொன் றறிகி லாதார் நிகைப்பினுற் றிரண்ட சாம்பல்
கையினுற் பிசைந்து தூற்றிப் பார்ப்பது கண்ட மன்னன்
எய்திய நகையி னோடு "மேடின்ன மரித்துக் காணும்
பொய்யினன் மெய்யை யாக்கப் புகுந்தீர் போமின்" என்றான்;

2691. "வேப்பெனும் தீயில் யான்முன் விடுபெற் றய்ய நீங்கள்
அப்பொழு தழிகி தோற்றீ; ராதலா வதுவா றுக
இப்பொழு தெரியி லிட்ட வேடெய்க்த தில்லை யென்றுற்
றப்புர வுடையீர்! நீங்க டோற்றிலீர் போலு" மென்றான். ஈஈஈ

2689. (இ - ள்) அருகர்தாம்...கதுவ - அமணர்கள் தாகைள் இட்ட ஏட்டினைத் தீயினின்றும் எடுகைச் சென்ற அணையபோது பெருகிய தீச் சுட்டமையாலே; வெந்து போந்தமை கண்ட மன்னன் - உடல் வெந்ததனுற புடைபெயர்ந்த சேனதனைக் கண்ட அரசன்; தரு...தணிபபிததான் - கொணரச் செய்து தரும் நீரினைக் கொண்டு வெந்த நீயினைத் தணியச் செய்தான; சமணர்...காண்பார் - சமணர்கள் அங்கே கருகிய சாம்பரும் கரியுமல்லாமல் வேறெதனைக் காண்பார்கள்? ஈஈஈ

2690. (இ - ள்) செய்வது ஒன்று அறிகிலாதரா - மேற்செய்வது ஒன்றினையும் தெரியமாட்டாதவர்களாகிய அவ்வமணர்கள்; நிகைபபிஞல்...மன்னன் - நிகைப்பினாலே அங்குத் திரண்ட சாம்பலைக் கையினுலே பிசைந்தும் தூற்றியும் ஏட்டினைத் தேடிப் பார்ப்பதைக் கண்ட அரசன்; எயிய நகையினேடும் - பொருத்திய புன்சிரிப் பினுடனே; வடு இன்னம்...என்றான் - "எட்டினை இன்னும் அரிததம் பாருகள்; பொய்ம்மை தெரியினேத தனேயாகக் கொண்டு அதனை மெய்பபொருளாக விளக்கப் புகுந்த நீங்கள் அகன்று செல்லுங்கள்" என்ற சொன்னன். ஈஈஈ

2691. (இ - ள்) வெப்பெனும்...தோற்றீர் - வெப்பு நோயாகிய தீயினின்றும் தான் முன்னர்ப் பிள்ளையாரால் விடுதிபெற நுங்களிட சீற்கள் வாதில் அழித்த தோல்வி புற்றீர்கள்; ஆதலால் - ஆகையினாலே; அது ஆருக...உய்த்தநில்லே என்றால் - அதன் வழியாகவே தொடர்ந்து இப்பொழுது நீயில் இட்ட ஏடு நிலைபெறுமல் ஒழித்துபட்டது என்றால்; அபபுரவு...என்றான் - வல்லமை மிக்கவர்களே! சீற்கள் தோற்கலில்லே போலும் என்று சொன்னான். எகூ

இம்மூன்று பாகளும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

2689. (வி - ரை) வாங்க - மேல் எடுக்க; வாங்குதல் - இட்டதொன்றினை அம்முறையே மீள எடுத்தல குறித்தது.

கதுவ வெந்து - கதுவுதலால் - வெந்தமையால் என இரண்டும் காரணப் பொருட்டாய வினையெச்சங்கள; வெந்து - நீச்சுட்டதனால் உடல் கருகிய நிலை குறித்தது.

மன்னன்...நீ தணிப்பித்தான் - நடுநிலைகோடாத மன்னனுயினமையால் அமணர் தோல்வியுற்றனராயினும் அவர வருந்தாவண்ணம் நீயைத தணிபபித்தனன்; இது நீதிமுறையும் கருணையும் உடன்கொண்ட செயல; நீ அமைத்த காரணமும் நிறை வெய்தி முறறுபபெறறமையும் உட்குறிபபு.

சமணர்...என்காண்பார்? - இது கலிகூற்று; வினை, வேறொன்றுமில்லை என இன்மை குறிதததது; கருகிய சாம்பல் - நீபபறறிய பொருள்கள் தாமே முற்றும் எரிந்து அவியின் வெள்ளிய நீறுபட ஆகும்; இல்குப் புனல்கொணடு அவிதததமையால் கருகிய சாம்பலாயின. கரி - நீப்பறறி யெஞ்சிய விறகின் துணடுகள். கருகிய - அமணர் இட்ட ஏடு நீயிடைப பஞ்சுபோல யெரிதலபோன என்ற குறிப்புமாம்; என் - தமது ஏட்டுத தண்டமேனும், அலலது வெற்றியின் அறிகுறியான எதுவேனும் என்க. 791

2690. (வி - ரை) செய்வதோன் றறிகிலாதார் திகைப்பினல் பிசைந்து தூற்றிப் பார்ப்பது - செய்வது - மேற் செய்யபபடுவது; படுவிருதி தொக்கு நின்ற பிறவினை. ஒன்று - ஒன்றினையும் - முறறும்மையும இரண்டனுருபும் தொக்கன; திகைப்பு - தமது நிலைகு அறிவு சோர்ந்து வேறு நீர்வு தெரியாதபோது உளதாகும் மனநிகழ்ச்சி.

கையினைப் பிசைந்து தூற்றிப் பார்ப்பது - இது அமணர் ஏடு காண்பது குறிச் செய்த செயலன்ற; வேறு செயல் ஒன்றும்தோனருது, அதனே எண்ணுகின்ற காலக் கழிவுக்குப் பிறா காணச்செய்யும் பாவனையாம எனக; நீரிலலாத கேடுவந்தபோழ்து கைகளைப் பிசைதல் அவலக்குறிப்பாகிய மெய்ப்பாடுகளுள் ஒன்றுதலும் காண்க.

எய்திய நகை - இகழ்ச்சிக் குறிப்பாகிய புன்சிரிபபு.

ஏடு ஒன்னம் அரித்துக் காணும் - சாம்பரைப் பிசைத்து தூற்றிப் பார்த்தலன்றி அரித்தும் காணுமகன்; அவாகள் செய்வது வீணசெயல் என்ற குறிப்புடன் கூறிய இகழ்ச்சி மொழி. அரித்து - அரிதலும்; உம்மை தொக்கது.

பொய்யினுல் மெய்யை ஆக்கப் புகுந்த நீர் - பொய்யாகிய சமயக் கோட்பாடு களைக் கருவியாகக் கொண்டு உண்மைபொருளிது என்று முடிபு காண்பது அனிந்த நீர்; மெய்ம்மை - சமய வாதத்தில் சமய உணமையை நிலைநாட்டி வெற்றி பெறுதல்.

போமின் - அகன்று சென்றுவிடுங்கள்; முன்னர் "என்னேவிட்டு அகல நீங்கும்" (2667) என்றது இடப்பாகத்தைத் நீர்க்க அணைய நின்ற இடத்தினின்று விலகி

நிற்றலைக் குறித்தது; இங்குப் போமின் என்றது இந்த இடத்திலேனும் தனது சார்பி லேனும் நில்லாது முற்றும் நீங்குதலைக் குறித்தது.

என்றான் - என்று கூறி மேலும் சொல்வான் என்றதாம்.

பார்ப்பது கண்டு—என்பதும் பாடம். 792

2691. (வி - ரை) வெப்பெனும் நீயில் யான்முன் வீடுபேற் றுய்ய - எரியில் இட்ட ஏடு உய்ந்ததில்லை - வெப்பாகிய நீயினின்றும் என்னையே விடுவித்துப் பின்னை யார் எடுத்தனர்; அப்பொழுது அதனினும் தோற்றீர்; இப்பொழுது இந நீயினுள் ஏடு தானும் வேகாமைக் காக்க வலியிலராகி நின்றீர்; ஒருசிறு எட்டினையும் நீயில் வேவாது காக்க உள்ளால் இயலவில்லை. வீடு முதலிதனிரு என்ற குறிப்புமாம்.

தோற்றிலீர் போலும் - துப்புரவுடையீர் - இலையிரண்டும் இகழ்ச்சிக் குறிப்புப் பட நின்றன; தோற்றிலீர் போலும என்ற இகழ்ச்சிக் குறிப்பு வினை தோற்றீர்கள் என உடன்பாடு குறிக்கத்தது. துப்புரவு - வல்லமை; "துபுர வில்லார் துணிபு தனைக" (1968).

ஆதலால் அது ஆறுக - முன்னர் வெப்புநீயில தோற்றமைபோல அதுவே வழி யாக இபபொழுதும; அநீயின வழியேயாக;

அது வேறுக—என்பதும பாடம. 793

2692. தேன்னவ னகையுட் கோண்டு செப்பிய மாற்றந் தேரார்;
சோன்னது பயனுக் கோண்டு சொல்லுவார் "தொடர்ந்த வாது
முன்னுற விருகாற செய்தோ", முக்காலி லொருகால் வெற்றி
யென்னினு முடையோ மெய்ம்மை யினியொன்று காண்ப"தென்றார்.

(இ - ள்) *தென்னவன்...தேரா* - பாண்டியன் இகழசசியாகிய புன்சிரிபபை உட் கொணடு சொல்லிய மாற்றதனை மனததுட் டெளிந்து மேறகொள்ளாதவராளாகி; *சொன்னது...சொல்லுவார்* - சொன்ன சொன்மாதத்திரையே அதன் பொருள் என்று மேறகொணடு சொலவார்களாய; "தொடாந்த...காணபது" எனறா - "தொடர்ந்த வாதமாக முன்பு இரணடுமுறை செயதோம; மூனற முறையில ஒரு முறையேனும் வெறறியடைவோம; ஆதலின உண்மைத் திறம இனி ஒருமுறை காணதறக்கு" என்றார்கள்.

(வி - ரை) *நகையுட்கொண்டு...தேரார்* - நகையுட்கொள்ளுதல் - இகழ்ச்சிக் குறிப்புடன் கூறுதல், தேரார் - அஞ்ஞனம தெரியாதாரபோல பாவனை காட்டி; அதன் புறப்பொருளையே பொருளாத தொடாந்துகொண்டு என்பா சோன்னது பய னுக்கொண்டு எனறா. சோன்னது - சொல்லின் பருப்பொருள

தொடர்ந்த வாது - முன்னுற இருகாற் செய்தோம் - மேலும் தொடாசசிபெறும் பொருட்டு ஒன்றறகொன்று தொடர்பின்றியே முனனாத தனிதததனி நிகழாத இரண்டு இகழ்ச்சிகளையும் ஒன்றபடதெரிந தொடாந்த வாது என்றெடுதத்துப் புனைந்துகொண்ட ஒரு வஞ்சனை; "ஒன்ற தவறின் மூன்று", "கதையும் மூன்று பிழை பொறக கும்" என்பத முதலிய சாமானிய உலக வழகனையும் தம பக்கமாக எடுதத முக்கா லில் என்று மேலும் ஒரு வாதத்திற்குத் தோறறவாய் செய்துகொணடத மறற மொரு சூழ்ச்சியைம; "சூழ்ச்சி முடிகருக தொழிலோர" (1387); இவ்வாற சூழ் தல் நீயினைப்பட்ட செயலைய உலகநிலை மாக்களின் இயல்பாம். அதனினும் மேலாய் சமயப்பீடை மிகக்கொண்டவர்களாகி வன்கணாளர்களாகிய சமணாகளிடம் இத மேலும் கொடிய அடர்ந்த நிலையிற் காணப்படும்; மேல்வரும் பாட்டுப் பார்க்க.

அரசகளே அமணர், தம் உரை ஒன்றன்பின் ஒன்றுப்ப் பலிக்காமை கண்ட பின்னும் ஒன்றன்மேலொன்றுய் கான்குமுறை மரணதண்டம் செய்வித்த றறகண்மை அவர் சரித்தட் காண்க; இவர்கள் மேலும் மேலும் இவ்வாறு யாதாமொரு காரணம் காட்டி ஒட்டிக்கொண்டே முடிவின்றிச் செல்வார் என்பதும், அரசன் மறப்பினும் பின்னையார் கருணையினல் அவர்களாகச் சலிக்குமளவும் இடங் தந்தருளுவர் என்பதும் அனுபவத் தாலும் நண்ணறிவினலும் உணர்ந்த அமைச்சர், பின்னர், " வேறினிச் செய்யும் இவ் வாதமொன்றினுந் தோற்றுர செய்வ தொட்டியே செய்வ" தென்பதும் (2693 - 2695) காண்க; வாதம் செய்தால் இவ்வாறு ஒட்டிச் செய்யும் வழக்கும் அதன் முடிவில் அதன்படி நீர்வு நிகழ்ந்தவதும் உணமை. " இத்தலூரி விருகினிலோ மென்றே யொட்டினர்...இந்த வழக்கை முடிப்பதென மொழிந்தார் " (17) என்ற தண்டியடிகளையனர் வரலாற்றினலும் இவையறியப்படும்.

முக்காலில் ஒருகால் வேற்றி யென்னினும் உடையேசம் - உடையோம் என்று உறுதிபெறக் கூறியது வாதம் தணிவோர் இயல்பு. வெற்றி பெறவது உறுதி; அவ் வாறு பெறினும் முன் இருமுறை தோற்றமை (2697) அரசன் குறிப்பிட்டபடி தோல்வித தானமே மிகுதியாம்; ஆயினும் யாங்களும் மெய்மை முழுமையல்லாவிடினும ஒரு பகுதியேனும் உடையோமாகக் காண்பது பொருளாம என்ற தொடர்ச்சி தமது நிலையை ஏறபித்தது சூழ்ச்சியின் மற்றமொரு நிலை; இது சிறிதாகக் காட்டி உள்நுழையும் சூழசித நிறன. உடையோம்-மெய்ம்மை என்ற கூட்டினுமாம். 794

2693. தோற்கவு மாசை நீங்காத் துணிவிலார் சொல்லக் கேட்" டிம்
மாற்றமென் ஞவ " தென்று மன்னவன் மறுத்த பின்னும்,
நீற்றணி விளங்கு மேனி நிறைபுகழ்ச் சண்பை மன்னர்
"வேற்றுவா தினியேன் செய்வ?" தென்றலு மேற்கோ ளேற்பார்,

2694. "நீடுமெய்ப் பொருளி னுண்மை நிலிபெறுங் தன்மை யெல்லாம்
ஏடுற வெழுதி மற்றவ் வேட்டினீ யாமு நீருமை
ஓடுநீ ராற்றி லிட்டா லொழுகுதல் செய்யா தங்கு
நாடிமுன் றங்கு மேடு நற்பொருள் பரிப்ப " தென்றூர். எகூசு

2693. (இ - ள்) தோறகவும்...கேட்டு - ஒருமுறைக் இருமுறையும் தோற்க வும் ஆசை விடாத உண்மைத அணிலிலாத அமணர் இவ்வாறு சொல்லக் கேட்டு; இம் மாறறம்...பின்னும் - அரசன் இந்த மாறறம் என்னுகுகடவது ?-இதனுற் கடவது ஒன்றுமில்லையே - என்று மறுத்தபின்பும; நீற்றணி...என்றலும் - திருநீற்றின் அழகு விளங்கும் திருமேனியினையுடைய நிறைந்த புகழினையுடைய சோழித் தலைவர் இனிச் செய்யும் வேறு வாத என்ன? என்ற கேட்டலும்; மேறகோள் ஏற்பார் - வாததனினை மேற்கொள்வதனை ஏற்றுக்கொள்பவராகி, எகடு

2694. (இ - ள்) வெளிப்படை. நிலையாகிய மெய்ப்பொருளினது வாய்மை யானது நிலைபெறும் தன்மையெல்லாம் தொகுத்து ஏட்டிற் பொருந்த எழுதி மற்ற அந்த ஏடுகளை யாங்களும் நீரும் ஓடுகின்ற நீரினையுடைய ஆறறில் இடுவோமாகில், நீருடனே ஒத்தொழுகிச் சென்றுவிடாது, இட்ட அவ்விடத்தைப் பற்றி முன்னர்த் தங்கும் ஏடு எதுவோ அதுவே கல்ல பொருளைப் பெற்றுடையதாகும்" என்று கூறினர்கள். எகஅ

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

2693. (வி - ரை) தோற்கவும் ஆசை நீங்கா - அனுபவத்தாலும் அறிவுபெருத ஆணவமலத இன்மையுடைய ; மாசை என்று பிரித்த மாசினை உடைய தன்மதத்தை என்பாருமுண்டு.

துணிவு - உண்மையிற் துணிந்த ஒழுகும் தன்மை ;

மன்னவன் இம்மாற்றம் என்னாவது என்று மறுத்த பின்னும் - இது ஒன்றும் பெருத வெற்றரை எனற அரசன் மறுத்த பின்னரும் ; நீ வாததின் முன்னரே " என்ன வாது உமக்கு " (2674) என்ற அரசன் இக்கு அச்சியின் மேலும் ஒரு தோல்வி கண்டபோத முற்றிலும மறததனன என்க ;

பின்னும் - என்றலும் - பிள்ளையாரத கருணைபபெருக்கைக் காட்டிய குறிப்பு உம்மை சிறப்பு.

நீற்றணி...மன்னர் - நீற்றணி விளங்கு மேனி - "புததரொ டமணே வாநி லழி விக்கு மண்ண நிருகீற செம்மை நிடமே" (தேவா) என்ற நிருமறைக்காட்டில் முன்னரே ஆணிகழந்ததற்கேப ஈணடுத் நிருகீறே முதலில வாதத்தில் வெற்றிகொண்ட தாதவின் அவ்வெறறிக கோலம மேலும் வினக்குவதாம் என்பத குறிப்பு. இக்கருத்தே பற்றிப பின்னா லவகைகரையில ஏடிடுக என்ற மன்னவன் பிள்ளையாரை கோகிய போத " நீற்றணி தீகழ்ந்த மேனி நிறைமதிப் பிள்ளை யாரும் " (2712) என இக குறிபபே கணடு போறறினன. " கீறற வணகையான் மறிததலும் " (2680)

நிறைபுகழ் - தாமே வெறறிகொண்டபோதும தோல்வியுறற பதகர்மீத கருணை கொணடமை புகழின் கிறைவாகும. " உரைபபா ருரைபபவை யெல்லாம் இரப்பார்க் கொன், றீவாமே னிறகும் புகழ் " (குறள்) எனற கருத்த ஈணடு வைதத்ச் சிந்திக் கறபாலத ; அமணா தோலலியுறற பினனும் இனி வேறறு வாது என்? என்ற கேட்டதும், அதவும் மன்னவன் மறதத பினனும் கேட்டதும புகழினபாலதாம். "இறைவன் பொருள்சேர புகழ " என்றவிடதத இறைமைக் குணகள முற்றவுமுடைய இறைவன் புகழே புகழெனபபட்டத என்ற தன்மையின் ஊருததும் ஈணடுக் கருதுக. நிறை புகழ் - எனற கருததமித புகழின் எலலே எனறபடி.

மன்னவன் மறுத்த பின்னும் - நிறைபுகழ்ச் சண்பை மன்னர் - மாறனும் மன்னவன் - பிள்ளையாரும மனனவா என ஒபபுகூறிய குறிபபும, அதன் மேலும இரப்பார்க்கொன் றீதலே மறுத்த அமமனனவனிலும, ஈந்த பிளளையா புகழின் கிறைவுடையா என ஏறறம்பெறக் கூறிய குறிபபும காணக. மனனன் சொல்லுகு மாறுக உரைததலும செயதலும் வல்லவா பிறிதொரு மன்னரேயாவர் என்றதும குறிப்பு.

சண்பை - சோழியின் ஒனபதாவத பெயர.

இனி வேறறு வாது செய்வது என் - என்க ; " இனி ஒன்று காணப "தென்ற (2692) பொதுபபடக் கூறினராகளாதலின் அத என்ன ? என்ரா. வேறறு வாது - சீலகள் மேற்கொள்ளும் வாதகள் முன்சொன்ன தனமையில் தோல்வியுறவனவே யன்றி வேறறு வாதம் என்ன உளத என்ற குறிபபும போதருதல் காணக

மேற்கோள் ஏற்பார் - மேற்கோள் - மேற்கொள்ளுதல் ; ஏற்றல் - துணிந்த முற்படுதல் ; ஏற்றுக கொள்ளுதல் ; ஏற்பார் - என்றார் என வரும் பாட்டுடன் முடிக்க. 795

2694. (வி - ரை) நீடு.....எல்லாம் - நீடு - நிலைபெறும் - எல்லாம் - என்ற அடைகள் முன்போலன்றி இவை முற்றிய உண்மைத் தன்மைகளின தொகுதியாம் என்றும், இவை தோற்றப் போகா என்றும் கூறிய குறிப்பு. வேறறு வாது என்?

என்ற குறிப்பிற்கு விடையாகக் கூறிய குறிப்பும் காண்க; ஏடுஉற - உண்மைத்தன்மை எட்டினிற் பொருந்த.

ஒடு நீர் - விரைந்து செல்லும நீரினையுடைய. ஓழுதுதல் - நீர் செல்லும் வேகத்துடன் ஒன்றுபட்டு ஒழுகுதல்; பள்ளத்தா முறுபுனலினூடு கீழ்நோக்கிச் செல்லுதல்; ஓழுகுதல் செய்யாது - ஓடிவிடாது.

ஓழுதுதல் செய்யாது - முன் தங்கும் - அமணர்கள் காணக் கருதிய நீருடன் சென்றுவிடாது இட்ட இடத்திலேயே, நீரில் இட்ட கற்போலத, தங்கிவிடுமனவேயாம்; ஆயின் இனிப் பிள்ளையார், அவரும் உலகும் காண்பரக் காட்டிய அருட்பெருமையாவது இட்ட அங்குத் தங்குமளவன்றி மேல் எதிர்த்துச் செல்லும் தன்மையாம; ஏடு அங்குத் தங்கும் அளவே உணமை விளக்கமாக அதனைக் கேட்ட நாட்டுமகளும் கருதினர் என்பதும் காணக. "ஓநீ ருடன்செ லாதுநிற் குமோ வோலை என்பார்" (2705) என்று மறுதிற கண்ட மாதா மைதர் கூறுதல் காண்க.

நற்போநுள் பரிப்பது - நன்மையாவது அழிவுறுமையும் நிலைபெறுதலும் காட்டி நன்மை பயத்தல். பரிந்தல் - தாங்குதல்.

குறிப்பு :—முன்னர்த நீயிற செய்த வாதம் கீழ்நோக்குதலின்றி மேனேக்கியே எரியும் நீயில் உய்ந்திடில அபபொருளும் மேனேக்கமுடையது என்ற கருதது. இங்கு நீரில் மேற்கொண்ட வாதம் நீர, மேலிருது கீழச்செல்லு மியல்புடையதாதலின் அதனுடன் செல்லாது நிறகும் தன்மையால் அபபொருள், மேல்நோக்க மில்லாவிடினும் கீழ்நோக்க மில்லாத அளவிலேனும் நிறபதெனற கருதது; தோயை நீக்க இயலாது தோற்றபின்பு "நீயின நீரில் வெல்வது என்று தம்மில் எண்ணி"ய அமணர் எண்ணிய இரண்டனுள் முதலில் நீயைப்பறறி ஒட்டியதறகு இதவும் ஒரு குறிப்பாகும்.

அங்கு - நாடி - முன் - தங்கும் - என்றவை அவ்வாறு நிறறலின் அருமையும் செயறகரிய தன்மையும குறித்தன. 796

2695. என்றமண் கையர் கூற வேறுசிர்ப் புகலி வேந்தர்
"நன்றது செய்வோ" மென்றங் கருள்செய, கணுக வந்து
வென்றிவே லமைச்ச னுரைதாம் "வேறினிச் செய்யு மிவ்வா
தோன்றினுந் தோற்றூர் செய்வ தோட்டியே செய்வ" தென்றார். எகூஎ

(இ - ள்) என்ற அமணகையா கூற - முன்கூறிய அவ்வாறு அமண்கையாகள் சொலல; ஏறுசிர்...அருள்செய - மிக்கு ஏறுகின்ற சிறபபையுடைய சோழிர்தலேவர் "நன்று; அதனபடியே செய்வோம" என்று அவரு அருளிசெய்ய; கணுகவந்து ...என்றார் - வெற்றியுடைய வேலேநிய அமைசசனுராகிய குலச்சிறையார்தாம் பக்கததில் வந்து வேறு இனிச் செய்யபபுகும இந்த வாதம் ஒன்றிலும் தோற்பவர்கள் அதன்மேற் செயயவேண்டுவது இது என்று ஒட்டியே செய்தல் வேண்டும்" என்றார்.

(வி - ரை) ஏறுசீர் - வேந்தர் என்க; முன்னர் இரணடு முறையினும் வெற்றி பெற்ற சிறப்பு இனியும் இவ்வாதத்தின் வெறறியாலும் மேல்எறி மிகுவதாகும் என்பது சிறப்பு. சீர் - வெறறியின் சிறப்பு; ஏறும் - இனியும் மேன்மேல் மிகுவதாகும்; வேந்தர் - முன் "மன்னர்" (2693) என்பதற்கேற்ப அதனோத் தொடர்ந்து சொல்லிய ஈண்டும் கூறப்பட்டது காண்க.

நன்று அது செய்வோம் - நன்று - இசைவுகாட்டும் மொழி; அது - அதனையே-அதன்படியே; தேற்றேகாரம் தொக்கது.

அதன் பொய - அருள் காரணமாகக் கூற.

அமைச்சனார்தாம் நணுக வந்து - என்றார் என்க; நணுக - "அகலா நணுகாது தீக்காய்வார்போல்க, விகல்வேக்தர்ச் சேர்ந்தொழுகு வார்" (குறள்) என்றபடி மன்னரை மிக அணுகாமலும் மிக அகலாமலும் கின்ற தூரதினினமம் பக்கத்தில் வந்த; பின்னியார்பாலும் கெருங்காத தூரதில் கின்ற முறையினின்றும் அணுக வந்த என்றலுமாம்.

நணுக வந்து - இவ்வாறு ஒட்டியே செய்வது - என்றார் - இவ்வாறு அமைச்சர் சொல்வதற்குரிய குறிப்பு முன் உரைக்கபபட்டது. இவ்வாறதற்கும் அதன் முடிபிஞல் அமணர் சாபினுக்கும் எல்லைகண்டு முடிக்கவேண்டுமென்பது அரசாங்க நியியிற் றும் மேற்கொண்ட கடமையினல் இவ்வாறு அமைச்சர் முன்வந்து கூறினர் என்க. இதற்கும் பின்னியாரது திருவுளப பாங்காகிய சொறசெயல்களுக்கும் எவ்விதத தொடாபுமில்லாமை கண்டுகொள்க; "வேன்றிவேல் அமைச்சனர்தாம்" என்று அமைச்சரத தன்மைபறறிக கூறியது மிக்கருத்து; "கோற்றெழில் தீருந்தவல்ல குலசிறைபார்" (2747) எனறும, "மருபபுடைக் கழுக்கோல செபதார் மந்திரியார் தாம்" (2704) எனறும் பினனாக் கூறும் கருததும் காண்க

வேறு...செய்வது - வேறு - முனவாதகைள முடிதத நியின அமையாத இத வேருமென்ற கருதி; ஒன்றினும் - "இனி ஒனற காணபது" (2092) என்ற அமணர் கேட்டநில வாது ஒன்று எனபதனே வற்புறுதி யியபடி; ஒன்றினும் - உம்மை, முன் இருமுறை தோறறபடி இவ்வொனறினும என இறாதத தழுவியது, தோற்றர் செய்வது - தோறறவா அதன்மேற் செயவது; உட்படும தனடம்; ஒட்டி-(பக்தயம்) இகலிக் கூறி இசைதது- ஒட்டுதல் - பணையம வைததலபோல ஒனறினை இசைதல், ஒட்டியே-ஒட்டியன்றிச் செயயததாகாத என வினையதனை விலகுதலின் பிரிநிலை; தேறறமுமாம். செய்வது - வாத செய்யக்கடவது. 797

2696. அங்கது கேட்டு கின்ற வமணரு மவர்மேறீ சென்ற
பொங்கிய வெகுளி கூரப் பொருமைகா ரணமே யாகத
தங்கள்வாய் சோர்ந்து தாமே "தனிவாதி லழிந்தோ மாகில்
வெங்கழு வேற்று வாணிவ் வேந்தனே" எனறு சொன்னர். எகூஅ

(இ - ள்) அதகு ..கூர - அதகு அதனைக் கேட்டுகின்ற அமணர்களும் அவ்வமைச்சாமேல் போயின பொங்கி எழுந்த ஸினம் மீககூடாதலால்; பொருமை...சோாந்து - பொருமை எனனும் தீகருணம் மிக்க காரணததால தகைளுடைய வாய சோாந்ததனஞல்; தனி வாதில்...என்ற - இவ்வொரு வாததிலும தோற்றோமானுல் இவ்வரசனே எங்களே வெல்லிய கழுவில் ஏற்றுவானுவன என்று; தாமே சொன்னர - தாமே சொன்னர்கள். எகூஅ

(வி - ரை) அவர்மேற் சென்று பொங்கிய வேதுளி - இவ்வாற தமது சூழ்ச்சிகளுக்கு ஒரு முடிவான எல்லே வகுத்ததினை எணணி அவர்மேற ஸினம் கொண்டார்கள்.

பொறுமை காரணமேயாகத் தங்கள் வாய் சோர்ந்து - மேற்கூறும் வஞ்னமாயி ஒட்டுதலுக்குப் பொருமையே காரணமாயிறறன்றி, வேறெவரும அவரை அவ்வாறு செலுத்தினரிலர்; பொறுமை - சைவர்களது ஆகத்தைக கண்டு பொறக்கமாட்டாது அழுக்காற படுதல்; "அழுக்கா றடையாாக கதிசாலும் ஒன்னர், வழுகியும கேடின் பத "; "அழுக்கா றெனவொரு பாவி நிருச்செறறத், தீயுழி யுய்த்த விடும்" (குறள்)

என்பன முதலொழி யாதலின் ஈண்டுப் பொருகையினல் தமகள் கேட்டினைத் தாமே தேடி வரவழைத்துக்கொண்டனர் என்பதாம். இவ்வனமாகவும் சமணர் கழுவேறிய செயலின்காரணத்தைஅமைச்சர்பாலதாகவோ, அரசன்பாலதாகவோ, அன்றிப்பின்னையார் பாலதாகவோ சமத்திப் பழிசாற்றுதல் எதனினைப் பெருந்தவறு! என்பதறியலாம். இவ் வாதம் ஒட்டிச் செய்வது என்ற அமைச்சர அறிதியிட்டனரே யன்றி இன்னபடி என்று வருத்தாரிலர். தண்டியடிகள்பால் " நாமகள் இவ்வூரிலிருக்கிலோம் " என்ற ஒட்டிய இவர்களது சகோதர சமணர்கள்போலவே இவாகளும் தாமே ஒட்டினர் என்க.

தனீ...வேந்தனே என்று சொன்னர் - தனி வாது - இனி ஒன்று எனறு வேண்டிப் பெற்ற இவ்வோ வாதம்; தனி - ஒபபறற எனறலுமாம்; வேந்தனே ஏற்று வான் - வேதன் எங்களே இவ்வாறு முறை செய்வாஞக; அதறகு நாங்கள இசைகின்றோம் என்று ஒட்டினர். இசைவு தமகள்பாலதாகவும் அதனே இயறறுதல்மட்டில் அரசன் பாலதாகவும் வைத்துக கூறியது காணக; நாமே - தம் பொறுபபாகவே. 798

2697. மற்றவர் சொன்ன வார்த்தை கேட்டலு மலய மன்னன்
"செற்றத்தா லுரைத்தீ; ருங்கள் செய்கையு மறந்தீ" ரென்று,
"பற்றிய பொருளி னேடு படர்புனல் வைகை யாற்றிற்
பொற்புற விடுவ தற்குப் போதுவ" தென்று கூற, எகூக

2698. பிளீயார் முன்னம் பைமபொற் பீடத்தி னிழிந்து போந்து
தெள்ளுநீர்த தாளப் பத்திச் சிவிகைமே லேறிச் சென்றார்;
வள்ளலா ரவர்தம் பின்பு மன்னன்மா வேறிச் சென்றான்;
உள்ளவா றுணர்கி லாதா ருணர்வுமா லேறிச் சென்றார். அ00

2697. (இ - ள்) மறறவர்...மன்னன் - மற்ற அவ்வமணர்கள் சொல்லிய வார்த்தைகளைக் கேட்டதும் பொதிகைமலைக்கு அரசனன பாண்டியன்; செற்றத்தால... என்றது-நீகள் வெகுளி மிகுதியினல் இவ்வாற சொலலிவிட்டீர்கள்; உமகள் செய்கைகளையும் மறந்துவிட்டாகள் எனறு கூறி; பறறிய...கூற - உணமைபறறிய பொருளை உட்கொண்ட நுணதம ஓலிகளை ஒடும் நீரினையுடைய வைகையாற்றில் அழகு பொருந்த விடுவதற்குச் செல்லுமகள் என்று சொல்ல, எகூக

2698. (இ - ள்) பின்னையார்...சிவிகைமேல் ஏறிச் சென்றார் - பின்னையார் பசும்பொனலியன்ற பீடதினின்றும முன்னம் எழுநது வெளியிற் போந்து தெளிந்த நீர்மையுடைய முதுத வரிசைகளையுடைய சிவிகையின்மேல் ஏறிச்சென்றருளினார்; வள்ளலார்...மா ஏறிச் சென்றான - வள்ளலாராகிய அவா பின்பு அரசன் குதிரையின்மேல் ஏறிச் சென்றான்; உள்ளவாறு...மாலேறிச் சென்றார - உண்மையினை உள்ளபடி உணர்ந்தொழுகும் ஆறறலிலலாதவர்களாகிய அமணாகள் தம் உணர்வினில் மயக்கத்தினை மேறகொணடு சென்றனர். அ00

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

2697. (வி - ரை) மலயமன்னன் - மலயம் - பொதிகை; இங்கு அந்த மலையினையுடைய பாண்டிய நாட்டைக் குறித்தது.

உங்கள் செய்கை - நீமகள் முன்னே செய்த வஞ்சச் செயல்கள்; வஞ்சனை - பொய் - சூழ்ச்சி முதலிய நீசமைகளில் மனமறிந்து கின்றமையால் அவற்றின் உண்மை நிலை காணபதெவ்வாறு என்றபடி; செய்கை - இவ்வாறு ஒட்டும் செயலால் மேல் நினைவு என்ன என்பதனை நினைக்க மறந்தீர் என்றலுமாம்.

பற்றிய போதலின் ஏடு - செயல் எட்டினிடமாகவும், முடிவு அதனைப் பற்றிய எழுத்தின் பொருண்மேலதாகவும் நின்றமையால் பற்றிய பொருளின ஏடு என்றார். பற்றிய - தொடர்ச்சியாற பொருந்திய ; பொருள் எழுத்தையும், எழுத்து எட்டினையு மாகப் பற்றிய.

போதுவது - பெயர். போதும் செயல் இனிச செயயக்கடவது என்றதாம்.

போதுக—என்பதும் பாடம். 799

2698. (வி - ரை) முன்னம் இழிந்து போந்து - "இனி வேற்ற வாதென்?" என அழைத்தமையாலும், "னைதது செயவோம்" (2695) என்று ஏற்றருளி யமையாலும் பிள்ளையார் தாமே முன்னா எழுந்தபோந்தருளினர்.

பைம்போந் பீடம் - பிள்ளையாருக்காக மனனன இடுவிதத பீடம். "முழுமணி யணிப பொற்பீடம" (2644) ; "தமனியப பீடம்" (2650).

தெள்ளும் நீர்த்தாளம் - நீர் - நீர்மை ; தெள்ளும் - நூல்வலலோர் தெளிந்து மேற்கொளளும். பத்தி - வரிசை.

மா ஏறி - குதிரையினமேல் ஏறி.

உள்ளவாறு - உணமைநிலை இருகுமக வழியினை ; இரண்டனுருபு தொக்கது.

உணர்வு மால் ஏறி - உணர்வு - அறிவு ; மால் ஏறி - மயக்கம் மிக்கு ; பொருளல்லாததைப பொருள் எனறமம, வெறறிபபா டலலாததனை வெறறிப்பாடு என்றம கொணடமையும, தோலவி வரும குணக்குறிகளை அன்னவென் றறியாமையும் சண்டி மால் - (மயகக) எனறார். உள்ளவா றறிகிலாதார் - எனறமையிற.

மேல் ஏறிச் சென்றார் - மா ஏறிச் சென்றான் - மால் ஏறிச் சென்றார் - என மூவருக்கும மூவகையான ஏறறம கூறியது அவ்வப பொருட்குறிபபுப் பெற நினற சொல்லணி. 800

2699. தென்னவன் வெப்புத தீர்ந்து செழுமணிக் கோயி னீங்கிப்
பின்னுற வணைந்த போது பிள்ளையார் பெருகுஞ் செல்வம்
மன்னிய மதுரை மூதூர் மறுகில்வந் தருளக் கண்டே
தன்னிய மாதர் மைந்தர் தொழுதுவே றினைய சொன்னார். ஂ0க

(இ - ள்) தென்னவன்...போது - பாணடியன் வெபபு நோய் நீஙகிச் செழிய அழகிய அரணமனையினினறம புறப்படடதை தமது பின்னே பொருந்த அணைந்தபோது; பிள்ளையார்...கண்டு - பெருகுகினற செலவம நிலையாக நிறைந்த மதுரையாகிய பழம் பதியின் வீதியில் பிளளையார் எழுந்தருளி வருதலைக கணடு ; தன்னிய...சொன்னார் - வந்த நெருங்கிய மாதாகளும மைந்தாகளும் வணஙகித ததமக்குத் தோன்றியவாறே வெவ்வேறு விதம்பட இததனமையான மொழிகளைச் சொல்லலாயினர்.

(வி - ரை) செழமணிக் கோயில் - அரசனுடைய அரண்மனை.

தென்னவன் - பின்னுற அணைந்தபோது - பிள்ளையார் வந்தருள - என்றது அரசன் பின்னும் பிள்ளையார முனனுமாகப போதை முறையும், அரசன் பின்அணைந்த பின்பு பிள்ளையார் வீதியில் புறப்பட்ட காலமுறையும் குறிததபடி; பின்னுற-பின்பற்ற என்றதும் குறிப்பு. இவ்வாத முடிவில் பிள்ளையார் சுற்றருளிய திருநீற்றினை முழுவதும அணிந்த புனிதனும் உய்ந்த வரலாறும் காண்க (2755 - 2756).

பெருகும் செல்வம் மன்னிய மதுரை மூதூர் - அகலயறகணணம்மையாரது அருள் நோக்கமாகிய அரசசெல்வம் நிலைபெற்ற நிறைந்த பழவூர். இத்தன்மை என்றும்

கிலைபெறறும் பெருகியும் நிகழவத இனறும் கணகூடு. "பண்டு மின்று மென்றமுள்ள பொருள்" (திருப்பல்லாண்டு) என்ற தன்மை இம்மூனறுக்கும் பொருத்தும்.

வந்தநன - ஒருசொல் ; வந்த அருள என்ற பிரிதத வந்த நகர மாக்தர்க்குக் காட்சி தந்த அருள என்றலுமாம் ; பின்னர் "மன்னவீ றணிந்தா னென்ற மற்றவன் மதிரை வாழ்வார, தனனிகின் ரூர்க் லெல்லாம் தாயநீ றணிந்து கொண்டார" (2755) என்னும்படி நகர மாகதரும் அருள்பெறறும் குறிப்பு.

துன்னீய மாதர் மைந்தர் தொழது-பிள்ளையார பின் அரசனும் அரசியாரும்மந்திரி யாரும் எழுச்சியாக ஒருபுறமும, அமணர் கூட்ட ம் எணணுயிரம் ஒருபககமுமாக மிகப் பெரிய ஆரவாரமுடைய எழுச்சியானமையாலும, தெய்வததன்மை விளஙகிய வாதமும் அரசன நோய் நீஙகினமையும் ஆகிய பெருகு செயல்கள நகர முழுதும் பரவிவிட்டமை யாலும் நகர மாந்தா இவ்வெழுச்சியினையும, இதன விளைவாகிய முடிவினையும் காணும் ஆர்வததுடன் எழுநதுவக்த மறறில் கூடினாகள் ; அவருள் மாதர்களே முற்படும் இயல்பு காட்ட அவர்களே முன்வைததார். **தொழது** - முனனர் வேறறுச் சமயம் சம்பின நிலையில இருநதாராதலின் தொழாதா (2642) இபபோது அதனில நம்பிக்கை நீக்கிச் சைவமாகிய முனசார்பின நமபிக்கை கொணடமையின ஈணடுத தொழுது என்றார் ; இடைபபட்ட சிறகால அளவே கினறமையால் சமண நமபிகைகை விரைவில் நீஙகவும் சைவகிலை முனபு கீணடநாட் பொருநதியதாதலின விரைவிற பறறவும் ஏதுவாயிற்று ; இசனை இவா மேறகூறுவனவறறு லறிக.

வேறு - ததமக்கேறறவாறு வெவவேறுக ; **இனைய** - மேல் 2706 வரை எழு பாட்டுக்களிற் கூறுமாறு. இவற்றையெலலாம தொடாபுபடுதறிக் காட்டுதலுமாம்.

வந்தணைய—என்பதும் பாடம். 801

2700. "மீனவன் கொண்ட வெப்பை நீக்கிநம் விழுமங் தீர்த்த
ஞானசம் பந்த ரிந்த நாயனர் காணு" மென்பார்;
"பானறங் குதலைச் செய்ய பவளவாய்ப் பிள்ளை யார்தாம்
மானசீத தென்ன ஞடு வாழவந் தணைந்தா" ரென்பார். அ0உ

(இ - ள்) மீனவன்...காணுமென்பார - பாணடியன கொணட வெபபுநோயினைத் தீர்தது நமது வருதததைத தீர்ததருளிய திருஞானசம்பநதா இநத நாயனர் பாருஙகள என்ற சொல்வாகள் ; பால் நறும்...தாம - பாலமணக் கமழும குதலைச்சொல் எழும் பவளம்போன்ற வாயினையுடைய பிள்ளையார்தாம் ; மானசீ...என்பார் - பெருமையாய சிறபபினையுடைய பாணடியனது நாடு வாழுமபொருட்டு இஙகு வநதணைந்தனர் என்ற சொல்வார்கள.

(வி - ரை) கோண்ட வெப்பு - தனது நிச்சாபினால் தானே தேடிககொணட என்ற குறிபபுக காண்க. நீமைக குடன்பாடு செய்து அதன பயனுக வாஙகிககொண்ட என்று வாணிகக் குறிபபும் காணக.

மீனவன் வெப்பு நீக்கி நம் விழுமம் தீர்த்த - என்றது அரசனுக்கும் குடிகளுக் கும் உள்ள உரிமைப்பாடு குறித்தது.

ஞானசம்பந்தர் இந்த நாயனர் காணும் - ஞானசம்பந்தர் என்ற பெயரால் அறி யப்படுகின்றவர் இதைத் தலிவர்தான் பாாததுக்கொள்ளுகள் என்று அறிந்தவர் அறி யாதாரைத் தேற்றியது ; பெயர் அளவாற் கேட்டறிந்த திருவுருவத்தைக் காணுத லின்றேர் பலாதலால் அவர்க்கு அறிவிததபடி; பின்னையா மதுரையில் அன்று முன்னி ாளே எழுந்தருளினர். அப்போது திருக்கோயிலுக்கு வந்தருளியபோதும் அருகுள்

தம் திருமடத்திற் கெழுந்தருளும்போது கண்டோர் லெரே ; பின்னர் அன்றிரவு அமணரது நீச்செயலால் கோய்மூன அதன்பொருட்டுத் திருக்கோயிலுக்குச் சென்று பின் ஆண்மனைக்குள் புகுந்தருளியபோது கண்டோரும் மறதும் லெரே ; அப்போது சமணசமயம் மூண்டு மாததரை மயகிகின்ற திண்ணிய இருள்நிலை யாதலின் மாந்தர் பலராகக் காண்பதும் பெரும்பொருளாகக கருதுவதும் நிகழா ; அன்று கோய் நீக்கிய நிலை பிள்ளையாரது அருளினால் திருநீறறிஞல் நிகழ்ந்தது என்றும், அதன்மேல் அனலிற் பிள்ளையா இட்ட ஏடு அழியாத நிலைபெறுச் சைவ மேன்மை சாதறியது என்றும், இவ்விரண்டினும் அமணா ஓட்டிகெட்டுத் தோல்வியுறறனர் என்றும், அரசன் அவர்களே ஒதக்கிய பின்னும மூனறுவது ஒருமுறை இறுதியாக எட்டினை சீரில் இட்டு உண்மை காணவும் இதிலும் தோல்வியுறின கழுவேறுதறரும் ஓட்டிப்போதருகின்றனர் என்றும் நிகழ்ந்த இசசெய்திகள் நகரம் முழுதும் கடுவேனிலிற் கடுநகாற்றிற் பரவும் காட்டுதறீபபோலப பரவிவிட்டமையின் இவ்வெழுச்சிகாண மக்கள் பெருநகூட்டமாகத் திரண்டு கூடிவிட்டனா ; இவர்கள் முனகூறியவாறு பிள்ளையாரது பெயரும் திருவுருவமும கண்ட சிலா காதுக பலருகுகும அவரையும் அவர் பெருமைகளையும் அவரால வெல்லபபட்ட அமணரின இழிவையும பிறவறறையும அறிவுறறதும் இயல்பின் எழுவன இதுகு கூறும மொழிகள. மேல் ஆற பாட்டுகளினும் வருவனவும இவ்வாறே இவரிகழ்ச்சிகளின் பலபல பகுதிகளை எடுதது மக்கள ததமக்குத தோன்றிய கருத்துக் களை எடுதது கூறும் தனமையும காணக.

முன்னர்க கண்டவர் சிலராதலினலும, சமண சமயக கோட்பாட்டுப்பட்டு நின்ற சில சிகாமையாலும "பண்ணிய தவங்கள எனகொல - புணணிய மூர்த்தி வர்த மதரையிற புகுத" (2642) என்றமட்டில அமைந்த நிலையினை ஒரு பாட்டிற் கூறிய ஆசிரியா, இதகு மாறா மைதரா பலரும் தனனிய பெருந்திரளாகக கூடிக கண்டு எசை வெறறிபபாடிய சமணரது இழிவும அழிவும் அறிந்துகொண்ட நிலையிற கூறுவன பல வாதலின அதறிறமபட ஏழு பாட்டுகளினற பலபடப புகழ்ந்து கூறும அமைதியும கவிச் திறமும காண்க. கூறும பொருளும ஏறறமபெற அமைதருளுதலும காணக.

மானசீர் - பெருஞ சிறபபு ; "பாண்டி நாடே பழமபதி யாகவும", "தெனபாண்டி நாடே தெனி" எனபனவாகி திருவாக்குகளால் பேரருட் பெரியோர்களாற போறறப படுதலும, இறைவர் எவ்வுயிாகளும எளிவரும பேரருளுடன தேறறமபெற விளங்குதலு மாகிய சிறபபு; பெருமகளாற போறறபபடுதல மாணம் - பெருமை எனவும், இறைவா எளிவரும கருணை சீர் எனவும கொளக. "நாமன்னு நெதைப பலநறறை மாநதா போற்றும், பாமனனு தொனமைப புகழபூண்டது" (968) என்ற இதறன்மை பற றியே தொடக்கதறில் ஆசிரியா அறிவிததருளியத காணக.

தென்னன் நாடு - தெனனவனும் அவன் நாடும என்ற குறிபபுமாம். நாடு வாழ-காட்டினைக் கூறியத அவ்வாழவு தங்களுக்கு வருதலால் தாம் பெறும் கலம் பறறி. "வாழ்த்தன கணகள்" (2701) என்பத முதலியவை காணக. "மணற கண்டு வாழ்த்தோ மென்பா" (171) ; "கலமலம் கலங்கள கூறி மனிதருக் தேவ ராஞா கண்ணிமை யாத வாழ்த்தி" (புரா - 1238) முதலியவை காணக.

வந்து - தாமே வந்தருளி ; இதறனே சோகேகளுகுமிடையே கருணையினல் வந்தருளி எனறதும் குறிபபு. 802

2701. "எரியிடை வாதிற் றேறற்ற திவர்க்குகம் மருக" சென்பார்;
"புரிசடை யண்ண னீறே பொருளெனக் கண்டோ" மென்பார் ;

"பெருகொளி முத்தின் பைம்பொற் சிவிகைமேற் பின்னே பார்தாம்
வருமழ கென்னே" யென்பார்; "வாழ்ந்தன கண்க ளென்பார்;

(இ - ள்) "எரியிடை...அருகர்" என்பார் - தீயிற செய்த வாதத்தில் நமது அமண குருமார் தோற்றதை இவர்க்கு எனறு சொல்வார்கள்; புரிசடை...கண்டோம் என்பார் - புரிசடையினையுடைய சிவபெருமானது திருமேறே மெய்ப்பொருளாவது என்பதனைக கண்ணாரக கண்டோம என்று சொல்வார்கள; பெருகு ஒளி...என்னே என்பார - பெருகும் ஒளியினையுடைய முதுத நிரைத்த பசும்பொனனுலியனற சிவிகையின் மேலே பின்னேயார்தாம் வருவினற அழகுதான் என்னே! என்று சொல்வார்கள்; வாழ்ந்தன கணகள் என்பார - அககாட்சியைக கண்டு நமது கணகள் வாழ்வடைந்தன என்று சொல்வார்கள்;

(வி - ரை) தோற்றது - தோல்வியுறற செயல் நிகழாதது. இவர்க்கு - இவரால்-குவ்வருபு கருததாபபொருளில் வரும் மூன்றனுருபாக வாதது. பகைப்பொருளில் வந்த ான்னனுருபாகவே கொளளினும் அமையும.

நம் அருகர் - இதுவரை மேம்பட்டு நமக்குக் குருமாராகி நின்றவர் என்ற உரிமை பற்றி நம் என்றார்கள்.

நீறே போநள் எனக் கண்டோம் - சுரவாதததால் நிச்சயமாகக் காட்டப்பட்ட உண்மையாதலின இவ்வாறு கூறினர். போநள் - மெயபபொருள்.

அழகு என்னே - என்னே - சொல்லவொண்ணாத அற்புதம் என்றபடி;

வாழ்ந்தன கண்கள் - வாழ்வாவதை கண பெறற பயனபெறுதல; "மண்ணெலா மும்ய வரத வள்ளலார் தம்மைக் கணடு, கண்ணினுற பயன்கொண டாரான கன்னிகாட்டவர்க ளெல்லாம்" (2760) எனறு மேல் இக்கருததை முற்றுவித்தல காண்க. "கண்ணினுலவர் நல்விழாப் பொலிவுகண் டாதல்" உறறிபபொருள் இரண்டனு ளொன்று மென்று காட்டும் பொருள் ஈண்டும் ஒககும் என்க; (அவர் - அடியார் எனக் கொள்ளுமாம்). 808

2702. "ஏதமே விளைந்த திநத வடிகண்மா ரியல்ப" லென்பார்;
"நாதனு மால வாயி னம்பனே காணு" மென்பார்;
"போதமா வதுவு முக்கட் புராணனே யறிவ" தென்பார்;
"வேதமும் நீறு மாகி விடுமிடு மெங்கு" மென்பார்; அ0ச

(இ - ள்) ஏதமே...இயலபாலெனபா - இந்த அமண குருமாரின் இயல்பினுலே நீமையே விளைந்தது என்று சொல்வார்கள்; நாதனும்...காணும் என்பார் - முழுமுதற் கடவுளாவார் திருவாலவாயில் எழுநதருளியுள்ள நம்பனே எனற கணடுகொள்ளுங்கள் என்று சொல்வார்கள்; போதமாவதுவும்...அறிவது என்பா - முக்கண்ணுடைய பழமை யாகிய சிவபெருமானேயறிவதுவே ஞானமாவது எனற சொல்வாகள்; வேதமும்... எங்குமென்பர் - வேதமும் நிருநீறுமே எஙகும் நிறைவுடையனவாகிப் பரவியிடும் என்று சொல்வார்கள்;

(வி - ரை) இயல்பால் - அவர் தத்தம் இயல்புக்கேற்றவாறு செய்த தொழில் களால்;

நாதன் - தெய்வத் தன்மையின் நிறைவுள்ள தலைவர்.

நம்பன் - நம்பி அடையத்தக்கவன் என்பது சொற்பொருள்; இது காரண இடுகுறியாய்ச் சிவபெருமானேயே உணர்த்தும்; நம்பி - (நம்பப்படுபவன்) என்றதுமிக்கருத்த.

கம்பி என்ற திருப்பதிகம் (கம்பின்) பார்க்க. ஏனைச் சிறுதெய்வங்களே கும்பி அடைபவர் களும், அவற்றுள் சிறிது பயன்கள் பெறுபவர்களும் உண்டு. ஆனல் "மறந்த தெய் வங்கள் வேதனைப் படுமிறக்கும் பிறகுமேல வினையும் செய்யும்; ஆதலா லவையி லாதா னறிக்தருள் செய்வ னனறே" (சித்தி); ஈண்டு அதகாறும் கைகொடுத்து அமணரை காத்துப படன் உதவிய அருகக்கடவுள் அவர்களே இப்போது கட்டாற்றில் விட்டுப போவது கண்டு மாதர் மைதர்கள இவவாறு கூறினர். "ஏர்கொணமுக் குடையுக நாமும் எழுத்தைக காறறிப் போக, ஊருளோ ரோடிக் காணக் கண்டனம்" (2535) என்று சமணர்களும் நகர மாதர்களும் முன்னாக கண்ட களுதறிறமும கருதுக.

புராணனே அறிவது - போதமாவது எனக. போதம் - முடிந்த ஞானம்; அறு பவ ஞானம். புராணன் - பழமைகளெல்லாம் பழமையானவன. அறிவதுவே என்று பிரிநிலே ஏகாரம் விரிக்க.

நம்பனே நாதனே - அவனே அவ்வாறறிந்து ஒழுகுதலே போதம் என்றதாம். இஃது அனல வாதத்தின் முடிவினல் மகளை அறிக்தகொண்ட முடிபு.

எங்கும் வேதமும் நீறுமாகி விடும் விடும் - விடும் விடும் எனறது தணிவுப் பொருளில் வக்த அகரு; ஆகிவிடும் - விடும் பகுதிபபொருள விகுதி; வேதமாகி விடுதல் - வேதகெறி தழைதலோகுதலேயும், நீறுமாகிவிடுதல் - மிகுசைவத அறை வினகருதலேயும் குறிததன; எங்கும் - முன அவை குனறிச் சமணம் மிகக இடங்க ளில எல்லாம, அதபறறி முன 2499 - 2500-ல அமணர கிறைதத கிலேயிற கூறப பட்டதும், பின 2769-ல் வேதமும நீறுமாகித தயமையாகபபட்ட கிலேயிற கூறப படுவதும் காணக. இவவாறு பினவரும நிகழசியினேத தம முணணறிவினுல் மதுரை நகர மாதர் மைதரா முனனறிது கூறும் நிறம கருதுக. இரண்டாவது விடும் என்ற சற்கு அமணர செயத மயகக மகறுவிடும எனறலுமாம.

வீரவிடுமெங்கும்—எனபதும பாடம. 804

2703. "அடிகண்மார் முகஙக ளெல்லா மழிகதன பாரீ" ரெனபார்;
"கொடியவஞ சணைக ளெல்லாங் குலைகதன போலு" மெனபார;
"வடிகொளவேன் மாறன் காதல மாறின வண்ண" மெனபார்;
"விடிவதாய் முடிந்த நிகத வெஞசம னிருளு" மென்பார்; அ0டு

(இ - ள்) அடிகண்மார ..பாரீர எனபார - சமண முனிவாகளின முகங்களெல் லாம வாடிவிட்டன பாருகள எனற சொலவாகள; கொடிய...போலுமென்பார்- கொடிய வஞ்சனேயாற கட்டிய மாயாசாலஙகள எலலாம் அழிததுவிட்டன போலும் என்ற சொல்வாகள; வடிகொள...வண்ணமென்பார-வடிதத வேலை வாதிய அரசன் (அடிகள்மேல வைதிருகத) பறற மாறிவிட்ட வணணக்தான எனனே அதிசயம்! என்ற சொல்வாகள; விடிவதாய...இருளும் என்பார் - இகத கொடிய சமணமாகிய இருளும் சீங்க இன்ற புலாகத விடிவதாய் முடிவதாயிற்ற எனற சொல்வார்கள;

(வி - ரை) அடிகண்மார் முகங்களேல்லாம் அழிந்தன பாரீர் - மறறில கூடிய பெருகிரட்டட்டதில மாதர் மைந்தா ஒவ்வொரு கிலேபறறிச் சிதித்தப பலபட்ட பேசினஞர்கள். முன்னர் முதலில் பிள்ளேயாரது அழகிய அருள்பொதிந்த தோறறம் கண்ட லெர் அதபறறிக் கூறினர்; அதன்பின் சிற்சிலா முன் கிகழ்ந்த இரண்டு வாதன கேயும் அவற்றின் முடிபுகளேயும் பற்றிச் சிதித்துப் பேசினர்கள்; இங்கு வேதலெர் அமணரின் கொடிய வஞ்சனைகளேயும் அவை அழிய, அவற்றுள்ளே சிக்குண்டு கிடந்த

அரசன் காதல் மாறுபட்ட நிலையினையும் சமண்மாயம் அழியும் நிலையினையும் எண்ணி மகிழ்ந்து கூறினர் ; இச்சிலைகள் இபபாட்டாற் கூறபபட்டன.

முகங்களழிந்தன - முகமழிதல அகத்தின் வாடிய நிலை முகத்திற ரேன்றுகின்ற குறிப்பு. முன்னர் இருமுறையும் தோல்வியுற்றமையும், வேந்தன் உண்மையறிந்து தனகள் கட்டினின்றும் நீஙகியமையும், இனிவரும் வாதிலும் உணமையானுதல் வஞ்சத் தானுதல் தாம வெற்றியடையமாட்டாத நிலைமையும், அதன் பிறகு தாமும் (கழுவேறித்) தமது சமயமும் மாயவேணடிய நிலைமையும் எண்ணி வாடினர் ; அழிந்தன - அழிந்த நிலைமையினை. அழிந்தன - இறகதகாலம் பினனர் வரும் அழிவு இப்போதே வநது விட்ட உறுதி காட்டிறறு.

வஞ்சனைகள் - பொய்யினுலும் வஞ்சனையினுலும் செய்த சூழ்ச்சி (செயல)கள்; மாயாசாலைகள் ; குலைதல் - நிலையழிதல. ரண்டும் இறகதகாலம் உறுதியும் விரைவும் குறிதததது ;

மாறண் காதல் மாறின வண்ணம் - அரசன அடிகளமேல் வைதத நிண்ணிய காதல் இவ்வளவு விரைவில முழுதும் மாறினவணணமதான் என்ன அதிசயம என்றது. மாறன்- மாறின - சொலலணி. மாறினவனுதலின் அக்குறிபபுபபட ரண்டு மாறன் என்று கூறினர் ; என்ன அதிசயம் எனபது இசையெசசம்.

விடிவதாயி...இருளும் - இருள் - அகனையுடைய இரவுக்காயிறறு ; ஆகுபெயர்; சமணை இரவிருளாகக் கூறியது உருவகம்

விடிவதாய் முடிந்தது - இருள் - விடிவது - முடிவது - இரவு இருள் நீங்கிப பொழுது புலர்ந்தது ; ரனையிருள்போல அழிவின்றி ஒதலகி நிற்பதன்றி இவவிருளின் செயல அழிந்து முடிவதாயிறறு என்பார் விடிவதாயிறறு எனறெழியாது இருள் முடிந்தது என்றார். விடிவதாயி - விடியற பொழுதாய் வர எனற குறிப்புமாம். சூரியனுகிய பிள்ளையார் வர என்றது இடததகதெறப வருவித் தரைத்தகெகாள்க ; முடிந்தது என இறந்தகாலத்தாற் கூறியது விரைவில் நிகழும் உறுதிபறறி. 805

2704. "நெருப்பினிற் ரேற்றூர் தாங்க ணீரில்வெல் வர்களோ?" வென்பார்;
"இருப்புநெஞ் சுடையா ரேனும் பிள்ளையார்க் கெதிரோ?" வென்பார் ;
"பருப்பொரு ளுணர்ந்தார் தாங்கள் படுவன பாரீ" சென்பார்;
"மருப்புடைக் கழுக்கோல் செய்தார் மந்திரி யார்தா" மென்பார்;

(இ - ள்) நெருப்பினில...வெல்வர்களோ என்பார்-நீயினை ஒட்டிச் செயத வாதத தில் தோற்ற இவர்கள் நீரிற செயயும் இவவாததனில வெறறி பெறுவாகளோ? என்று சொல்வார்கள் ; இருப்பு...எதிரோ என்பார் - இநத அமணாகள இரும்பு போன்ற கடிய நெஞ்சுடையவர்களாயினும் பிள்ளையாக்கு எதிராய் நிறக வல்லரோ ? என்று சொல்வாகள் ; பருபபொருள்...பாரீர என்பார் - நுணபொருளல்லாத பருபபொருளினை மட்டும் உணர்ந்த அவ்வளவில் அடஙகிய அமணா படடிருக்கும் முடிபினைப பாருங்கள் என்று சொலவார்கள் ; மருப்புடை....மந்திரியார்தாம் - கொம்புகளைப் போலக் கூரிய நீண்ட கழுமரங்களை மந்திரியாராகிய குலச்சிறையார் செய்வித்துள்ளார் என்று சொல்வாகள் ; அ0கூ

(வி - ரை) முன் பாட்டுக்களிற் கூறிய கருத்துக்களன்றி, அமணர்களின்பாலன வாக எழுந்தனவாய் வேற பலருடைய உற்றுரும் அமைந்தது இப்பாட்டு.

நெநப்பினில் தோற்றுர் நீரில் வெல்வர்களோ-கெருப்பும் ஒரு பூதம்; அதுபோன்ற நீரும் ஒரு பூதம் ; ஆதலின் ஒன்றிற் ரேற்றூர் மற்ரென்றில் வெல்வரோ என்பது.

தோற்றமுறையில் சீரைத் தனபாற் சேறதலிக்கவும், ஒடுக்குமுறையில் அதனைத் தன்னின் ஒடுக்கவும் வல்லது நீ ; ஆதலின் அதனில் தோல்வி சீரினில் தோல்வியை உள்ளிட்டதாம் என்க. இனி, வலிய பெருப்பினில் இவர்களே வெனறு தோல்விபெறச் செய்த பின்னையார் அதனின் கீழதாய்க் குறைந்த வலிமையுடைய சீரினில் வெல்லாது விடுவரோ ? வென்றேவிடுவர்-; ஆதலின் இவர்கள் வெல்வரோ என்ற பின்னையாரைப் பற்றி உரைப்பதும் கருதத ; ஆலை இயபாட்டுக் கருத்திக்கள முழுமையும் அமண அடிகளைப்பறறியே எழுதலின் இவ்வாறு அவர் செயல்பறறிக கூறினர்.

இநப்பு நெஞ்சம் · இரும்புபோற் கடிய நெஞ்சம ; அன்பு கலவாத முழு வன் கண்மையுடைய மனம ; இநப்புநெஞ் சுடையார் · அமண அடிகணமார் ; வஞ்சனே தெரிந்திதத் கொலியும சூழத தணிபவர ; உடையரேனும் - உம்மை தெறப்பு. எதிரோ - எதிரதது தீறதும ஆறறலுடையராவரோ ; எதிர்க்க வல்லவரோ ? எதிர் அல்லா என வினு எதிரமறை குறிதததது.

பநப்போநள் உணர்ந்தார் · பசு தர்மகளாகிய அறகளே விதிகளும் நூல்களே மட்டும் கறற, அவற்றின நுணபொருளாகிய உளளுறையை அறியாதார; பாவ புண்ணியகளே உணராதார. இவ்வகை புராணத திருகுறாதொகையும், "கறகை யாடிலென்" என்பன முதலாக வரும தனித திருகுறாதொகையும், பிறவும பாரக்க; "பூசுசீறு சாந்த மெனப புனைநத பிராணுக கான பணி, யாசிலாநல லறமாவ தறிய வருமோ உமக"என்ற தணடியடிகள புராணததுள் (6) இநநட்பம் விளகப்பட்ட தும, பிறவும் காண்க. இவ்வாறனறி தணபொருளாவது இயறகையினூடு இரண்டறக கலநதுளள இறையின் உணமை எனறுரைபபாரும உணடு ; இயற்கை எனற சொல்லழகுப பொருளறற தொன்றெனபது முனனரே கூறபபட்டது. " அறியுமசசமய நூலினனவினி லடஙகிச் சைவ, நெறியினிற் நெதருஞ செலலா நிலமை " (2501) ; " அந்நூற் றனமை யுன்னிய மாநதர், இதுவே பொருளென ததனிலே யறைதலின, வேற்றோர் பனுவ லேற்றோர்க் கிசையா, மாறு பாடு கூறுவரதலுறு, புறசமும யகல் நெறபில வாகி, அருளின மாந்தரை வெருளுற மயகி, யலகைத தேரின் நிலையிற நீரும " (சகசுற்ப நிராகரணம · பாயிரம)

படுவன - அழிகதபடும நிலைகள்.

மநப்புடைக் கழக்கோல் - மநப்பு · கொம்புகள் ; குதறிக் கொல்லும்படி கூரிய மான்கொமபு முதலாயின. மநப்புடை - மருபபின் தனமையை உடைய. அது போலக் கூரிய ; மானகொம்பினே நுனியிற் பறிதத எனபாருமுணடு.

கழக்கோல் செய்தார் - தோற்றல் கழுவேறறுவான இம்மன்னனே என்ற ஒட்டிஞாதலாலும், தோறபது நிச்சயமாதலாலும, அதனபின ஒட்டியவாறே மன்னவன ஆணையிடின எணணுயிரவரையும் கழுவேறற அதனிலை கழுகள் வேணடபபடுமாதலாலும், முன் எசசரிகையாக மாதிரியா கழுகளைச் செயதனர் என்க; இவ்வாறன்றி இவ்வமணரைக் கழுவேற்றி யகறறதலில முனைந்தனா அமைசசர் எனற பொருளபடக் கூறவனவெல்லாம் பிழை எனக.

806

2705. "ஏடுகள் வைகை தன்னி லிடுவதற் கிணைந்தா" ரென்பார்;
"ஓடுநீ ருடன்சே லாது நிற்குமோ வோலை" யென்பார்;
"கீடிய ஞானம் பெற்றார் நிறுத்தவும் வல்ல" ரென்பார்;
"நாடெலாங் காண விங்கு நண்ணுவர் காணீர்" என்பார்; அ0எ

(இ - ள்) இனி, நகரமாந்தருள் வேறுநிலைர் இனி வரும் நிகழ்ச்சியினையும் அதன் விளைவையும் பற்றித் தமகள் எண்ணமகளைச் செலுத்நிப பேசும் கூற்றுக அமைந்தது இப்பாட்டு.

(வி - ரை) ஏடுகள்-பின்னையாரும் சமண அடிகண்மாரும் தனித தனி வேறுக இடு தலின் பன்மையாற கூறினா ; ஏடு - இல்து, ஓலை - இதழ் - என்ற பொருளில் வந்தது.

ஏடு நீரடன் செலாது நிற்குமோ ஓலை - ததம எடுகளை வைகையில் இடச் செல் கின்றனா எனற ஒருவா கூற, அதைத தொடர்ந்த இன்னொருவா அவ்வாற இடுதலில் நீருடன் செலாத தகுகிறகும் எடு மெயபபொருள பரிபபது என்றும் அதுவே வெறறி யாமென்றும், இதில தோலவியுற்றவா கழுவிலேற்றி முனறசெயயப்படுவர் என்றும் அறியப்படுதலின், அவ்வாற எகத எடுதாளக-ஓலை என்பதன் இயல்பு நீரில் மிதப்பதும் அந்நீருடன் ஒழுகிச் செலவதுமாகும , ஆதலின் இவ்விருவர் எடுகள எதுதான ஓடுநீரு டன் செல்லாத இட்ட இடதநில தங்குகிறக வலலதாம என்ற ஐயுறறுக கூறினா ; இஃத இருகாளிலும உலகியற பொருளியலபுபறறிக கூறும் பெரும்பான்மையோ கூற முதல் காணக

நீடிய ஞானம் பெற்றார் நிறுத்தவும் வல்லர் - இது மேலும ஒருவர் முன்கூறிய ஐயக் கூறறினைத தொடர்ந்துகொணடு கீர கூறியது ஒகுமை ; ஆனல் இகரு அவ்வாற ஓடுநீருடன செலாதுகிறகும் எமது ஓலை எனற தணிந்து இசைகத பின்னையா ரது இயலபினை நீர அறிகதிலீர ; அவர் எனனையோ பெறறம ஞானமபோலன்றி எபபொரு ளும் என்றும் எகரும நீடிய ஞானம பெறறவா எனபது முனனா இகரு நிகழகத இரு நிகழ்சசிகளாலும், முன வரலாறறாலும அறிகதனம ; ஆதலின அவா அவ்வாற தமது ஓலையை ஓடுநீருடனே சென்றுவிடாமல் நிறுதநி வைகவும் வல்லா என்றார். சடப்பொருளி னியல்புபறறி உரைததாகரு இகரு ஞானதின் வலிமைபற்றி உரைக் கப்பட்டது. சிததப பொருளாகிய ஞானமே சடபபொருளை இயகருதலால இவ்வாற கூறினர். பிள்ளையாரது பல்வேறு அருளிபபாடுகளிலும் இவ்வாற ஐயகொண்டு அபசாரப்படும் இக்காண மாகள் இவ்வணமை கண்டு தெளிவார்களாக.

நிறுத்தவும் வல்லர் - இகரு அமணா சமய உண்மை காணக கேட்டு ஒட்டிய நிலை, ஓலை நீருடன செல்லாத இட்ட இடதநில நிறபதேயாகும். அதனையே இகரு இக நகர மாந்தரும் விளுவியும் விடததும பேசினா. ஆனல், இட்ட எடு அமமட்டோடு நின்றுவிடாத ஒடும நீரை எதிர்ததும் செல்லவைததது பிளளையாா பெறறருளிய அருணஞானத்தின் பெருமையாம எனபதை இவ்விருநிறததவரும் அப்பொழுது அறிக் திலர் ; எதிர்பாராததவருமல்லா. அவா இட்ட எடு "மநவறு பிறவி யாற்றின் மாதவர் மனஞ்சென் றற்போல் - எதிர்ந்துநீர் கிழித்துப் போகும் " (2744) தன்மை பின் நிகழ்ச்சியின் அறிவிக்க அறிகுவா ; ஆண்டுக கூறிய உவமையினல் அதன் காரணமும் இயல்பும் உணர்த்நியபடியும் காணக. எனனையோ மனஞ் சொற் செயல்கள் பிறவி வழியே செல்ல, மாதவா மன முதலாயின பிறவியை எதிர்த செல்வனவாதலின் அத் தகைய பிள்ளையார் இட்ட எடும் நீரினையெதிர்த சென்றது என விளக்கிய குறிப்பும் காண்க.

நாடெலாங் காண இங்கு நண்ணுவர் காணீர் - முன் கூறியவர் பிள்ளையார் தமது நீடிய ஞானத்தால் ஓலையை ஓடுநீருடன் செலாது நிறுத்த வல்லவா என்றார். அதனைத தொடர்ந்த மேலும் ஒருவா அவ்வாற நிறுத்நி வெறறி பெற்றவராய் காட்டவராகிய நாம் எல்லாம் காணும்படி நிறுத நேரதநில் இங்கு வருவர் ; அதை நீகள் பாருங்கள் என்றார். இகரு நீடிய ஞானம பெறறுராகிய அவர் எனற எழுவாய் வருவிக்க.

காண நண்ணுவர் - அவரது வெற்றியின் பின், இவரு காம் காணச் செல்லும் இவ் வமணர் ஒட்டியபடி மன்னவனுல் முறை செய்யப்பெற்றுக கழுவேறறப்பட்டு ஒழிவர் ; ஆதலின் அவர்கள் மீள இங்கு நண்ணுமாறிலலை; இவர் ஒருவரே காடுகொண நண்ணுவர் என்ற குறிப்பும் காண்க. இருநிறததாருள் இவர் நணணுவா என்றமையால் அவர் நண் ணுமை அருத்தாபததியனவையால் தானே போதருதல காணக.

நாடேலாங் காண - அவரையும் அவர் ஓலியினை நிறுதிய வெற்றியையும் யாவ ரும் தேற்றமாய் உணருமபடி; "கீரால் விளகிடடமை நீணு டறியுமன்றே" (தேவர) "காட்டா ரறிய" (1898)

காணீர் - இன்னும் சிறிதுபோதில நீகளே கண்ணுற காணலாம் என்ற உறுதி பட அவா அறிதகொண்ட கீலே. 807

2706 "தோற்றவா கழுவி லேறத துணிவதே யருக?" ரென்பார்;
"ஆற்றிய வருளின் மேண்மைப் பிள்ளையார்க் கழகி!" தென்பார்;
"நீற்றினுறை றென்னன் றீங்கு நீங்கிய வண்ணங் கண்டார்
போற்றுவா ரேல்லாஞ் சைவ நெறியினைப் போற்று" மென்பார்;

(இ - ள்) தோறறவா...அருகா எனபா - தோலவியுறறவர்கள கழுவில் ஏற என்ற அமணர்கள துணியலாமா ? எனறு சொலவாாகள ; ஆறறிய ..அழகித என் பார் - செய்த காட்டிய அருளின மேணமையினையுடைய பிளளையாருக்கு இஃத அழகேயாகும் என்ற சொலவார்கள் ; நீறறினுல்...போற்றுவா - திருநீற்றினுலே பாண்டியா நீகுகினினறும் நீகுகிய தனமையைக கண்டவாக்ள் யாவரும் சைவத் நிறத் தினைப போறறுவாாகள் (ஆதலால்) ; எல்லாம் சைவ நெறியினைப போற்றும் என் பார் - எல்லாம் சைவ நெறியினையே போற்றுகுகள என்று சொலவார்கள் ;

(வி - ரை) அருகா "தோற்றவர் கழுவில் ஏற"ந் துணிவதே என்க. ஏகாரம் வினு. துணிந்திருக்கக கூடாது எனறு எதிர்மறைப குறிததது. "தனிவாதில் அழிந்தோ மாயில கழுவேறறுவான வேதனே" (2696) எனறு தோறறவா செயவதனை ஒட்டிய தனைக குறிதது மாந்தா ரென்றிக் கூறியது. தோற்றவர் - இவ்வா தொன்றினும் தோல்வியுறபவா. முனனமே தோல்வியுறறவரா யிருநது அதனுல அறிவுறுமல் இவ் வாறு துணிவதோ ? என்றலுமாம.

இப்பாட்டு இவ்வாதனின முடிவாக அருகா தோறறுக கழுவிலேற ஒட்டியதனை யும், அதனையும் பிளளையா ஏறறப போத்தருளியதனையும், அதன் முடிவில் மாந்தர் செய்தக்கதனையும் எணணிய மறறும் பல மாந்தாகளின் கூற்றுக அமைந்தது. பலபல மாந்தர் பலபலவாறுகவும் எணணியவற்றுள இது முடிவதனில் பறறியதாதலின், தொடரின் முடிவில கூறபபட்ட அமைதி காணக.

அருளின் ஆற்றிய மேண்மைப் பிள்ளையார்க்கு இஃது அழகு - என்க ; அருளின் ஆற்றிய மேண்மை - இதவரையும செயதருளிய செயல்கள யாவும், இகல் - செறறம் - முதலிய நீக்குணமொன்றம பறறுத, அருளினை மேறகொண்டே செய்த மேபபடு ; அமணர்கள் தமது நிருமடதனில் நீயினை ஈடியேட்டபோதும் அவாகளை முனியாது அத் நீ, முறைவழுவிய அரசனிடம் பையவே சென்ற ஆக என்று ஆறுபுரிந்த அவனை வினை அனுபவிக்கச் செய்த நீாதது ஆட்கொளளும் அருளும், வாதிற் புகுமுன் அதனை அஞ்தெ நிருவருட் குறிபபினை ஒருமுறைக் கிருமுறையும் விளவி யறிகதபின்பே அர சனையுட் புகுந்த அருளும், ஆணமே அரசன் அமணர்க்கிடமகொடாது மறறாகளை அவனைத் தடுத்த அவாகளுக்கு வாதநதிறகு இடம் நல்கருளிய அருளும், பிறவும்

ஈண்டுக் கருதியே மாதவர்கள் இவ்வாறு புகழ்ந்து அருளின் ஆற்றிய மேன்மை என்றனர்.

பிள்ளையார்க்கு இஃது அழகு - என்றது அவ்வாறாயின், இருசுச் சமணர் தோற் பது கிச்சயமாதலறிந்தும் அவர்களை கழுவேறவின்ற இவ்வாதத்தில் மூற்பவேது அந்த அருளுடன் பொருந்துதமோ? என்ற வினாயினாகவு அற்றன்று; இஃது அதற்கு மாறன்று; அழகேயாம் என்ற விடுதலவாறு; அமணாகளே இவ்வாதத்தின் இடையில் இடங்கொடாது மறுதலை அழகன்று; அது சைவவுண்மையினை முற்றும் காட்டாநாத வின் அரசனேயும் இவ்வாதத்தில் இசைவித்தருளினர் பிள்ளையார்; கழுவேற ஒட்டி இசைந்தது அமணர் தாமே செய்துகொண்ட செயல; பின்னர அவ்வாறே அவர்களைக் கழுவேற்றி முறைசெய்வது அரசனது ஆணைச்செயல். இவ்விரண்டிலும் பிள்ளையார்க்கு எவ்விதத தொடர்புமில்லை எனபனவாதி கியாயங்களே உட்கொண்டு இவ்வாறு அறி வுடை மாந்தர் இஃது இழுக்காவதனறி அழகேயாம என்று முடிததனர். அழகு-அழகே யன்றிப பிறிதில்லை என்று பிரிவிலே ஏகாரம் தொகைது.

நீற்றினுல் - போற்றுவார் - திருநீற்றின் உணமைது திறத்தினுலே அரசன் அமணர் களால் வந்த தீங்குகள் எல்லாவற்றினின்றும மீஙகின உணமையினைக் கண்டவர்கள் அவ் வண்ணமேபபற்றி எடுததப போற்றுவார்கள்; எல்லாம் என்பதனே முன் உரைத் தவாறன்றி ஈண்டுக் கூட்டி எலலாத தீங்கும் என்றும, எல்லா வண்ணமும் என்றும் உரைபபினு மமையும், கண்டார் - பிள்ளையாரது அருளின மேன்மையும், இஃது அவர்க்கு இழுக்காதலன்றி அழகாமாறும் கணடு போற்றுவார் என்பதும் குறிப்பு.

எல்லாம் சைவ நெறியினைப் போற்றும் - ஆதலால் எல்லா வகையாலும் முழு உண்மையும் உடைய சைவ நெறியினை போற்றுங்கள்; சைவநெறி - சைவநெறியின் வாய்மை; ஆதலால் என்பது சொல்லெச்சம்; எல்லாமுடைய சைவநெறி என்பது அக்நெறியிலடையப்படும் கடவுளாகிய சிவனது முழுமுதற்றன்மை. "இறைவனு வாண்ஞான மெல்லா மெல்லா முதனமையனுக நிரகமெல்லா மியல்புடையா னியம்பு, மறைகளாக கமங்களி னுலறிவெல் லாநதோறறும் மரபினவழி வருவோாக்கும் வரா தோர்க்கும், முறைமையி னுலின்பத தன்பகொ டுததலாலே முதன்மையெலா மறிந்து மூயக நிரண்டு போகத, நிறமதனுல வீனையறுகஞ் செப்பியாலே சேருமனுக் நிரக மெலாங் காணுதனாஞ் சிவறகே" (சிதநி - 8-17) என்ற கருததுக் காண்க.

கண்டார் போற்றுவார்—என்பது இராமாதாச் செட்டியார் கண்ட பாடம். 808

2707. இன்னன விரண்டு பாலு மீண்டின செடுத்துச் சொல்ல,
மின்னெளி மணிப்பொற் காம்பின் வெண்குடை மீது போதப்
பன்மணிச் சிவிகை தன்மேற் பஞ்சவ னூட்டு ளோர்க்கு
நன்னெறி காட்ட வந்தார் நான்மறை வாழ வந்தார். அ0சு

(இ - ள்) இன்னன...சொல்ல - இததகைய மொழிகளைப் பிள்ளையார் செல்லும் மதலில் இருபக்கதகளிலும் நெருங்கிய மாந்தாகள் எடுத்துச் சொல்ல; மின்னெளி... போத - மின்போன்ற ஒளியினையுடைய அழகிய பொறகாம்பினையுடைய வெண்குடை மேலே விழுந்த; பன்மணிச் சிவிகைமீது - பல மணிகளையுடைய முத்தச்சிவிகையின் மேல் எழுந்தருளி; பஞ்சவன்...வந்தார் - பாண்டியனது நாட்டிலுள்ளவர்களுக்கு நன்னெறியினைக் காட்டும் பொருட்டு வந்தருளினர்; நான்கு மறைகளும் வாழும் பொருட்டு வந்தருளினர்.

(வி - ரை) இரண்டோலும் ஈண்டினார் - அத்தெருவின் இரு பக்கங்களிலும் நெருங்கிவந்த மாந்தர் ; இரண்டோலும் - "அன்னிய மாதர் மைந்தர்" (2699) என்ற இருபாலாருமாக என்றலுமாம்.

எடுத்துக் சோல்ல - கிழச்சியின் ஒவ்வோர் பருதிகளைப்பற்றி முன் கூறியவாறு எடுத்துப் பேசி.

வேண்தடை - திருவரத்துறையீசர் அருளிய முத்துக்குடை. வெண்குடை அரச அடையாள அகங்களுள் ஒன்றாகும் குறிப்பும் ஈண்டுத் தருவது. சிவிகையும் அவ ரருளிய அக்குறிப்புத் தருவது.

பஞ்சவன் நாட்டுளோர்க்கு நன்னெறி காட்ட வந்தார் - "கன்னிநாடு அமணர் தம் மாற் கட்டழித்து" (2511) ; "னெறியி னெறியி லழுங்கிய நாடு" (2557) என்ற வரு வனவாற்றுல் அரசனே யுயவிக்கும்வகையால் நாடுய்யச செய்யப் பின்னையார் போந்தருளி னர் என்பதாம்.

சோல்ல - போத - வந்தார் - என்று விணைமுடிபு கொள்க.

நான்மறை வாழ வந்தார் - மறைகள் வாழும் பொருட்டு வந்தவராகிய - அவதரித் தவராகிய - பின்னையார் என்க. வந்தார் - வந்தவர் ; பெயர் ; விணைமுற்முகவே கொண டும் பின்னையார் என்ற எழுவாய வருவிததும், காட்டவும் வந்தார் ; அதனுல் மறை வாழ வும் வந்தார் என்றவாறுமாம். "மிகுதிரு விளக்கிட்டார் விழுத்தொண்டு விளக்கிட்டார்" (கலியா புரா - 11) எனபுழிப்போல.

காட்ட - வாழ - காட்டுமபொருட்டு - வாழும்பொருட்டு என்க.

ஈன்னன - முன 2699-ல "வேறு இனிய சொன்னர்" என்று தொடங்கி எனபார் என இருபதாதைத்து வகையான கருததக்களே எடுத்துச சொல்வார்களாகி, இவ்வாறு கூற - எனற இந்த ஒன்பது பாட்டுக்களேயும் தொடாபுபடுதது உரைத்துக் கொள்க. 809

2708. "தேன்றமிழ் விளைக வாத திருக்கழு மலத்தோன் வந்தான;
மன்றுளா ரளிதத ஞான வட்டில்வண் கையன் வந்தான்;
வென்றல குய்ய மீள வைகையில் வெல்வான் வந்தான்";
என்றுபன் மணிச்சின் னங்க ளெண்டிசை நெருங்கி யேங்க, அகo

2709. பண்மணி முரசஞ் சூழ்ந்த பல்லிய மியம்பப் பின்னே
தேன்னவன் தேவி யாரு முடன்செலத், திரண்டு செல்லும
புன்னெறி யமணர் வேரோ புடைவரப் புகலி வேந்தர்
மன்னிய வைகை யாற்றின் கரைமிசை மருவ வந்தார். அகக

2708. (இ - ன்) தென்தமிழ...வாதான - அழகிய தமிழ் விளைகும்படி வாத திருக்கழுமலததோராகிய பினனையா எழுந்தருளினார; மனறளார...கையன் வந்தான- அம்பலவாணர் அளிததருளிய வெஞானபபால் கிறைத்த பொற்கிணணத்தையுடைய வண்மை பொருந்திய திருக்கரததையுடைய பினனையார் எழுநதருளினர் ; வென்ற... வெல்வான் வந்தான - முன்னம சுரவாதத்திலும் அனல்வாதத்திலும் வெறறிபெற்ற உல குய்யும்படி மீள வைகையாற்றில் செயயபபடும் இவ்வாதத்திலும் வெலபவராகிய பின்னை யார் எழுந்தருளினர் ; எனற...எங்க - என்ற இவ்வாறு பல அழகிய முததுச் சின னங்கள் எட்டுத் திசைகளிலும் நெருங்கி ஒலிக்கவும், அகo

(இ - ன்) பண்மணி...இயம்ப - பல அழகிய முரசங்களுடன் இணைந்த பலவகை வாத்தியங்கள் முழங்க ; பினனே...உடன் செல - தமது பின்பு அரசனும் மாதேவி யாரும் சேர்ந்து வரவும் ; திரண்டு...புடைவர - கூட்டமாகச் செல்லும் புன்மை தெரியில் நின்ற அமணர்களை வேறு ஒரு பகுதியில் வரவும் ; (இவ்வாறு) புகலி வேந்தர்...மருவ வந்தார - சோழி வேந்தராகிய பிள்ளையார் நிலைபெற்ற வழுகையாறறின் கரையின்மேல பொருந்தும்படி எழுதருளி வந்தார். அகக

இந்த இரண்டு பாட்டுக்களும தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

2708. (வி - ரை) தேன்தமிழ் விளங்க வந்த - தேன் - அழகு ; அழகாவது என்றும் அழியாத இளமையோடிருத்தலும், மாறுத அழகினைச் செய்யும் ஞானமய மாகிச் வெனடிச் சாரபு தருதலும் ஆம். " தெனறமிழப பயனு யுள்ள திருதொண் டத் தொகைமுன் பாட " (358) ; பிள்ளையார் இதச் சிவஞானத் தமிழ் பாவும்படியே அவதரித்தவராதல ''அசைவிலசெழுந் தமிழ வழககே யயலவழக்கின் றுறைவெல்ல'' (1922) என முதறகண்ணே அருளபபட்டது காணக ; ''பிறவியெனும் பொல்லாப பெருகைடலே நீந்தத், துறவியெனுக தோறறோணி கணடீர.....சம்பந்தன், தனமாலை ஞானத தமிழ்" (ஆளு. பிள் - மும்மணிகோவை - கக.)

அளிந்த ஞான வட்டில் - அளிதத சிவஞானப பாலைக்கொண்ட பொற்கிண் ணத்தை எந்திய ; ஞானப் பாலினையுடைய வடடிலை ஞானவட்டில் என்றார்.

தமிழ் விளங்க - எனறும, ஞானவட்டில் வண்டை - எனறும் கூறியது தமிழின் மூலம் ஞானதைப் பரபபி அஞ்ஞான இருளாகிய சமணததை வெனறார் ; மேலும் வெல்வார் என்றபடி.

வேன்று - மீள வேல்வான் வந்தான் என்று அடுத்து எடுத்துக் கூறியபடி.

வேன்று...வேல்வான் வந்தான் - முனனே வெனறவிட்டதனோடு மீளவும் வெல்வார் என்று சின்னங்கள் பின்வரும் வெறறியை விளம்பின ; வேல்வான் - வெல்லும்பொருட்டு என்றலுமாம்.

உலகுய்ய என்பதனை உலகுய்ய வேன்று என்றும, உவதுய்ய வேல்வான் என்றும் ஈரிடத்தும் கூட்டுக. உலகுய்ய - இவவாதத்தினுலை பிள்ளையாருக்கு ஆகவேண்டிய நல மொன்றுமிலலை. உலகுய்ய - வந்தான் என்று கூட்டி உரைத்தலுமாம்.

பன்மணிச் சின்னங்கள் - அரதனறைாத அருளிய முதலச் சின்னம் - தாரை - காளம், இவையும அரசாங்க அடையாளம. சிவனருளிய சிவிகையும குடையும் சின்னமும் என்ற மூனறும் உரியபடி இறைவ தொழிறபட்டதனை முறையே கூறியது காண்க.

ஏங்குதூல் - மிக்க ஓசைபட எடுத்தியமபுதல ; மரபு வழக்கு.

ஏங்க - உடன்செல - புடைவர - வந்தார் - என வரும் பாட்டுடன் முடிக்க. 810

2709. (வி - ரை) பன்மணி முரசம் சூழ்ந்த பல்லிய மியம்ப - இவை அரசன் வரும் வீதி எழுச்சியைக குறிக்க முழஙகி வரும் அரசனது வாத்தியங்கள் ; முன்கூறிய சின்னகளினினறும் வேறு பிரிதது அரசனையும் மாதேவியாரையும் சார முன்வைத் தோதியதும் இவை இயம்பப பினனே தெனனனும் தேவியாரும் வர என்றதும் இக் கருத்தி.

பின்னே - பிள்ளையார் பின்பு ; பணிகின்ற நிலையிற் பின்பற்றி என்ற குறிப்பு மாம். வீதியில் ஒரு பக்கததில் பிள்ளையாரும பரிசனகளும் அரசனும் மாதேவி யாருமாகவும், மற்றொரு பக்கத்தில் வேறு கூட்டமாய அமணரு மாகவும் போக் கினர்.

தென்னனும் தேவியாரும் உடன் சேல - இருவரும் ஒருசேர; அரண்மனையில் அரசனது கோய் கீழுமிய அளவும் மாதேவியாரும் மகநிரியாரும் அரசனது கோ டுடன்பாடின்றித் தாமே முறைபட்டு நின்ற காரியஞ் செய்யவேண்டியதாயிற்று. அதன் மேல் நிகழ்ந்த அனல்வாதமும், இனி நடக்கவுள்ள புனல்வாதமும அரசன் அவையினர் முன் கடைபெற்ற அரசனது கோ அராசகாரியமாயின. இவற்றுள மாதேவியார் உடனிருந்ததல் வேண்டப்படுவ தின்மையும், முன்னா அரண்மனையில அவையின் முன் அனல்வாதத்தில் உடனிருந்தமையும், ஈண்டு வைகைக கரைசகு உடன் வந்தமையும், அரச காரியங்கள் அரசனும அரசியாரும உடனிருந்து இபறறும் முன்னோர்கள் அரசாகக வழக்கின் மரபு குறிததது. இது முன்னோகளின கலவெட்டுக்கள பலவற்றாலும் அறியத தக்கது.* அவ்வாறு அரச காரியஙகளில் உடனிருப்பவும் அரசன் சமணச் சாரபுகொண டொழுகிய முனனோகாட் டொடரநதே சைவசமயம்பறறிய அரச காரியஙகளில் இருவரும் உடன இலலாத வேறுப் கினறமையால, இஙகு அதனிலும் இருவரும உடனிநந்து செல்லுதலே விதாத கூறினா. உடன் - உடனாக; இணைந்து; ஒருசேர.

நிரண்டு செல்லும் புன்னெறி யமணர் - அமணருள அரசனையில் நின்ற லெரேயன்றிப புறதது கினற எனையோரும நிரணடு எணணபிரவாகளாகக் கூடியவர்கள் என்க.

வெறேர் புடை வர - வீதியில பினனேயாருடன பினவருமப சைவத திருக்கூட்டத்துடன சேரநிலலாத வேறு ஒரு பகுதியாக அமணா வர; அவ்வாறு சாரதுய்யும் வீதியில்லாமையால் வேறோர் புடை வந்தனர்.

மன்னிய - புகழாலும் சிவச்சார்பு பெற்ற புணணியததாலும் நிலைபெற்ற; மீஞட்சியம்மையார் நிருமணததில் குண்டோதரனுகாக இறைவரது ஆணைபபடிக் கடகையே வைகையாருக வநதது எனபது திருவிளையாடற புராணத்தா லறியலாம். இதன கரையில் இறைவர் மணசுமநத திருவிளையாடல நிகழ்ந்தது. "ஆணியாா வைகைத திருக்கோட்டி னினறதோா நிறமுந தோன்றம" (தாண - பூவணம) எனற இதனைத தமிழ்மறையும போற்றியது.

கரைமிசை மருவ - கரையின மேலே பொருநதுமபடி; மிசை மருவ - எனபது (ஓசை) மேற்சென்ற பொருநத என்ற குறிபபுமபட நினறது. 811

2710. கார்கெழு பருவம் வாய்ப்பக் காமுறு மகளிர் ருளளஞ
சீர்கெழு கணவன் றன்பால் விரைவுறச் செல்லு மாபோல்
நீர்கெழு பௌவ நோக்கி நிரைநிரை யிரைத்துச் செல்லும்
பார்கெழு புகழின் மிக்க பண்புடை வைகை யாறு. அகஉ

(இ - ள்) காகெழு.. செல்லுமாபோல் - காகாலம் வாதபோது விருப்பம் மிகக மகளிரது மனம் நெபபுடைய தமது கணவனிடம விரைாது செல்லுமாபோல; பார் கெழு...ஆறு - உலகில் புகழினுன் மிகக பண்புடைய வைகையாறு; நீர்கெழு... செல்லும் - நீர மிகக கடலே நோக்கி வரிசையாகிய அலைகளினுல ஆரவாரிதத்துச் செல்லும்.

* I பருதி பகுதி கருக - மனுச் சரிதம் கண்ட கலவெட்டு. வரிகள் 10 - 11. "நிரிபுவன முழுதுடையா ளிவன்நிரு வுளதநருள் முழுதுடையரெனன உடனிருப பச் செம்பொன் வீரசிம்மாசனதது" என வருதலும், பிறவும் காணக.

(வி - ரை) இப்பாட்டு ஐயம்.* உவமை இச்ச இடத்துக்கு ஏற்றதாகத் தோன்றுமையும், மகளிர் என்ற பன்மையும் கணவன் என்ற ஒருமையும் ஆக மயருகு நிலும் உண்ணுக; வைகை கடலுடன் சேராமையும் கருதுக. "கடல் ஒருவர்க்கு முதவாத வுவரியென, மடுத்தறியாப் புனல்வைகை" (வாதபு. உப. பட.) என்ற திருவிளையாடற் புராணக் கருத்துக் காண்க. இப்பாட்டின் கருத்து "ஆறறிவீர் கடுகவோடும்" (2711) என்று மேற்பாட்டிற் கூறப்படுவதுமை கருதுக.

கார்கேழ பதவம் - காகாலம - இதுவரை ஆற்றியிருந்த நெறப்புப்பற்றி மகளிர் என்று பன்மையிற் கூறினார் என்றும், பன்மையாகவே கொள்ளினும் "எவல் இனைய வா தாய்வயிறு களிப்ப" என்பதிறபோலத் தனிதனிக் கணவன்பால் எனறலுமாம் எனறும், ஆறுகள் எல்லாம் கடலநோகசிச செல்லும் பொதுவியல்புபற்றிக் கூறினர் என்றும் இங்கு அமைதி காணபாருமுண்டு. கறபொடு பொருந்திக் கணவன்சொற் பிழையாது இல்லிருந்த நலலறஞ் செயதல மகளிரது இயறகை, முலலையாதலின் அது முறகூறப்பட்டது. எனவே முலலை என்ற சொற்குப பொருள் இருந்தலையிற்று" (தொல் - பொருள் -அக-5 -)ச்சினார்கினியா உரை; "காரு மாலையும் முல்லை" என்பது சூத்திரம்; (ஷை - 6)

உள்ளங் கணவன்பால் விரைவுறச் செல்லுதல்-"பினவரும் கூடலாகிய குறிஞ் சித் திணையொழுக்கம் நிகழும்பொருட்டு; புணாதலின்றி இலலறம் நிகழாமையின்" என்பா ச்சினார்க்கினியர்; "விரவுற" எனபதுமை பாடம். "மகளிர உளளம் செல் வதறகும் வைகை விரைநது செல்வதற்கும காரபபருவம் ஒபபக் காரணமாகும் குறிப பும் காண்க.

நீர்கேழ பௌவம் நோக்கி - செல்லும் - "பள்ளத்தா முறுபுனலில் ஓழ்மேலாக" (திருவா) என்றபடி ஓழ்நோக்கிச் செல்லும் நீர் மிக்க விரைவுடன் செலலுதல் குறிப்பு. நோக்கி-செல்லும்-என்றதனால் நோக்கமாகச் செல்லும் அளவேயன்றி அது வைகுடுவ தில்லை என்ற குறிப்புப்போலும்.

நிரை - தீரை - இரைத்து - நிரை - வரிசையாக; தீரை - அலைகளினால்; இரைத்தல் - ஓசையிருதல; நிரை தீரை இரைத்தல் - காமுறு மகளிர உள்ளம் விரைவும் அலைவும் பதைபபும் பொருத்தம பண்புகு உவமை.

செல்லுமாபோல் - செல்லும் - வினைபறறிய உவமம். 812

2711. ஆற்றினீர் கடுக வோடி மருங்குற வரச னேக்கி,
"நீற்றணி திகழ்ந்த மேனி நிறைமதிப் பிள்ளா யாரும
வேற்றுரு வருகர் நீரும் விதித்தவே டிடுக" வென்ரூன்;
"தோற்றவர் தோலா" சென்று முன்னுறத் தணிக்கிட் டார்கள். அகந

(இ - ள்) ஆற்றினீர்...கடுக ஓடும் மருஙகு உற - (முன் கூறியவாறு பின்னையா ரும் யாவரும்) ஆற்றில் நீர வேகமாகச செலலும் இடதநின் பக்கத்தைச் சேர; "நீற் றணி...இடுக" என்ரூன் - திருநீறறின அழகு விளங்கிய நிறைமதி போன்ற பின்னையா ரும், அதனின் வேறுகிய உருவுடைய அருகாளாகிய நீங்களும் இசைந்தபடி அவவவர் ஏடுகளை இடுகைள் என்று சொன்னான்; தோற்றவர்...அணிகதிட்டார்கள் - "முன் தோற்றவர்கள் பின்னும் தோலாகாள்" என்று உட்கொண்டு முக்கிக்கொள்வதற்கு அருகர் தணிந்தனர்.

---

*எனது "சேக்கிழார்" பக்கம் உகக பார்க்க.

(வி - ரை) ஆற்றின் நீர் கடுக ஒடும் மருங்கு உற - பிள்ளையாரும் பிறரும் முன் பாட்டிற் கரையிலை மருவ வந்தமை கூறினர். இதனைக் கரையைக் கடந்து மணல்வழி உட்சென்று ஆற்றில் நீர் வேகமாய் ஓடும் இடத்தின் பக்கம சேர்ந்தமை கூறினர். ஆற்றின் - ஆற்றின் பரப்புகளுள் ; கடுக - வேகமாக ; நீர் ஒடும் மருங்கு - நீர் செல்லும் இடம் ; உற - இருநிறத்தவரும் பொருந்த.

நீற்றணி திகழ்ந்த மேனி நிறைமதிப் பிள்ளையாரும் - திருநீறணிவதால் தான் உய்ந்தமையால் அதனால் நிறைந்த திருக்கோலமே காயஞரது பெருக திருகோலமாக அரசனைக் கவர்ந்தது என்பது குறிப்பு. நிறைமதி - முழுமதி ; மதி - அறிவு - ஞானம் - என்று கொண்டு அருள்ஞான நிறைவுடைய என்றலுமாம். இதை இனிய பாண்டிய னுகரு ஞானோபதேசம செய்ய புகுகின்றமையால் முழுஞானமுடையராய ஆசாரிய நிலகணம் முழுதும பெறறவா என்ற குறிப்பும்பெற வைததா எனக். " நீற்றணி, விளங்கு மேனி " (2693) என்றதும் ஆண்டுக கூறியனவும பார்க்க.

நிறைமதி - மதி - இரட்டற மொழிதலால சகரன் எனற பொருளில "கலிவளர் மதியே" (990) ; "மதிக்கொழுதை" (2628) எனறும, "திலதநிடை வாணி னின்று நீளிரு ணீகை வாத, கலசசெழுங் நிதகள் போலும கவுணிய" (2649) என்றும ஈண்டு அநகியின் முழுமை குறிகக "நிறைமதி" எனறும கூறிய கவிகபமும உட்குறிப்பும் கண்டுகொள்க. அமுதகலைகள நிரமபித் தூய்மை செயது பிறவிவெபபதை மாறறத் தணணெளி பரபபித தணமை தரது அணடமெல்லாம பரகது திருநீற்றினொளி தழைதத லின் மதியை உவமிததார். நீற்றணி திகழ்ந்த எனறதனுடன் புணாதது ஒதியது மிக கருதத ; நீற்றணி நிகழ்தலின் நிறைமதி போன்றனா என்ற குறிப்பும காண்க. "தோறறு மன்னுயிர் கட்கெலாந தூய்மையே, சாறறு மினபமுந தணமையுந தருதலாற், யாற்ற வணடமெ லாம்பரந் தணணலவெண, ணீறறினி பேரொளி போனறது கீணிலா" (308)என்றும, "நிருநீற்றுத் தொணடாகுழா யிருநிறமுஞ சேர்ந்த போதி,லிரண்டிலில வின்கடல்க ளொனறுங்கி" (1498) எனறும கூறிய கருத்துக்களை காணக.

வேற்றுரு - நீறறணி நிகழ்தறகு வேறுநிய உரு எனபது ; வேறுபாடு உடையது என்றலுமாம் ; வேறுபாடாவது " புரட்டரைக காணு கணணாய பேசாத பேயக ளோடே" (திருவிசைப்பா) எனறபடி காணதகாத நிலை ; வேற்றுமை செயயும் என்ற குறிப்புமாம். இவர்களது உருவே பிளளையாரது அருளபெறு முன் இருளு செய்யு முருவாக அரசன் மயஙகிய முனனே நிலையும இங்குக் கணட மாறுபாடும கருதுக. இதன் காரணம் 2717-ல கூறுதல காணக.

வீதிந்த - ஒட்டி யிசைவபூணட ; வீதிந்தல் - கியமிததுகொள்ளுதல்.

தோற்றவர் தோலார் - முன்னே தோற்றவா மேலும தோறகமாட்டார். இஃது உலகியல் நிலையினைவைத்து எண்ணியது. தனபலின்பகளை மாறிவரும் நிலையும, சோநிடனுந் தணிபு நிலையும், பிறவும் மனததட் கொணடனா. என்று - என்ற கருதி.

முன்னுற - முற்கிகொளள ; துணிந்நீட்டல் - ஒருசொல்.

இடு - பகுதிபொருள் விகுதி. துணிந்நீட்டார்கள் - துணிந்தார் ; இதனு இவவா றன்றித் தம் கையிலிருக்கும் சமயதால்னே யிட்டார்கள் என்று உரைதாதனார் முனவுரை காரர். ஏடு எழுதியிடுதல மேல்வரும் பாட்டிற கூறபபடுதலின் அது பொருளன் றென்க.

நீகழும்—என்பதும் பாடம்.

2712. படுபொரு ளின்மி நெல்லிற் பதடிபோ லுள்ளி லார்மெய்
யபவர் பொருளே "யத்தி நாத்தி"யென் றெழுதி யாற்றிற்
கடுகிய புனலைக் கண்டு மவாவினுற் கையி லேடு
விடுதலும் விரைந்து கொண்டு வேலைமேற் படர்ந்த தன்றே. அசச

(இ - ள்) படுபொருள் இன்மி - உள்ளே உண்மை தோன்றும் பொருள் இல்லாத தால்; நெல்லிற் பதடிபோல் - நெறபதாபோல; உள்ளிலார் - மெய்மமையாகிய உள்ளீடில்லாத அமணர்; மெய அடுபவா - மெய்பபொருளைப் பொய்ப்பொருள் என்று கூறுவோராய; பொருளே அதனி நாதநி என்று எழுதி - ஆருகதனுலுட் கூறும் பொருளின் தொகுதியை அதனி நாத்தி என்று எட்டில எழுதி; யாறறில்...கணடும் - ஆற்றில் விரைந்து ஒடும் நீரினேக கண்டும்; கையில ஏடு அவாவினுல் விடுதலும் - கையிற கொண்ட எட்டினைப் பேராசையினுலே விடுதலும; விரைந்து...அன்றே - அப்பொழுதே அதனேககொண்டு வேலையின் முகதோக்கி விரைந்து சென்றது.

(வி - ரை) படு பொருள் - உளளிருகது தோன்றுதற காதாரமாகிய உயிரப பொருள்.

இன்றி - இலலாமையால்; பதடி - பதா.

உள் இலார் - உள் - உட்பொருள்; உணமை.

மெய் அடுபவர் - உணமையை மறுபபவராகி; வினேமுறறெச்சம்.

மெய் அடுபவர் அத்திநாத்தி என்றேழுதி - அத்தி - உள்ளது - உண்டு; நாத்தி - இல்லாதது - இல்லை; எனவே உள்ளது என்றதனேத தாமே உடன்மறுத்துக் கூறுப வர் என்பதாம். அத்தி நாத்தி ச அமணாகளது மூலமநதிரம்.

ஆற்றிற் கடுகிய புனல் - வேலைமேற் படர்ந்தது - இத்த இரண்டு கருததுக்களே யும் மூன்பாட்டில் கூறியது காணக.

கடுகிய - கடுகிச் சென்ற; விரைந்த. கண்டும் பார்த்தும். உம்மை சிறப்பு. புனலையும் பாராததனர்; அது கடுகிச் சென்றதையும பாராதனர; அவவாறு கணடும் அமைந்துவிடாது விடுத்தனர். முன்னர எரியும் நீயைக் கண்டு இது நம் எட்டினே எரித்துவிடும் என்றறியாது இட்டுத தோல்வியுறறனர். அதுபோலவே இஙகுப் புன லும் கடுகியது கணடும், இது எட்டினே உடன்கொண்டு இழுதது செல்றேவிடும் என்றறியாது என உமமை இறந்தது தழுவிய எச்சவும்மையாகி உரைப் பினு மமையும்; இப்பொருளில நீ எரித்ததுபோலப புனல கடுகியது கண்டும் என்க.

அவாவினுல் - அவா - தகாத ஆசை; பேராசை என்ப. ஆசை வெட்கமறியாது என்பது பழமொழி. ஒரு தோல்வி கண்டபோது அதுகொண் டமைந்துவிடாது மேலும் மேலும் தோல்வியைத் தேடிக்கொள்வதனுல் காணமில்லாது முயலுதல் அவா வினுல் வருவது. இக்கருத்தேபபற்றிப் பின்னர் "காணிலா வமணர் தம்மை எட்டாற்றில் விட்டுப் போக" (2714) என்பது காணக.

கையில் ஏடு - கையிற் கொண்ட ஏடு; எட்டைப புனலில் விடுதலும் என்று விரித்துக் கொள்க.

வேலைமேற் படர்ந்தது அன்றே - வேலை மேல் - வேலையை நோகி. வேலை - கடல்; மேல் - முகமாக.

வேலை - காரியம் என்று கொண்டு புனல் தன்னுட்பட்ட பொருள்களே ஈர்த்துச் செல்லும் இயல்புடையதாதலின் தன் வேலையைச் செய்தது என்ற கைக்குறிப்புப்

படக் கூறியதும் காண்க. இழுதைச் சென்ற புனலைப் பற்றிய இக்கருத்தினையே தொடர்ந்த பின்னர் "கட்டாறதில் விட்டுப போக" என்ற ஈரத்தச் செல்லப் பட்ட ஏட்டினைப்பற்றிக் கூறுவது காண்க. மெய்அடுபவர் - உடல் வருத்தும் செயல் கனைத் (சுடுபோறை கிடத்தல் - மயிர் பறித்தல்) தவமென்று செய்பவர்என்ற குறிப்பு மாம்.

இனி, ஈண்டு, உள்ளிலார் - (முன் உறற தோல்வியால்) உள்ளம் அழிந்தவர் என்றும், மெய்அடுபவர் - உணமையை கொல்பவா என்றும், கையில் ஏடு - கை ஒழுக்கம் எனக் கொண்டு ஒழுகக கியலறற பொருள் கொண்ட ஏடு என்றும் குறிப்புக் கள் காண்பர் திரு. வ. சு செ அவாகள.

படர்ந்தது - படர்தல் - செல்லுதல் ; அபபுனல் எனற எழுவாய் அவாயகிலையான் வந்தது. அன்றே - அதபொழுதே. 814

2713. ஆறுகொண் டோடு மேட்டைத தொடர்ந்தெதி ரணைப்பார் போலத்
தேறுமெய் யுணர்வி லாதார் கரைமிசை யோடிச் சென்றார்
பாறுமப் பொருண்மேற் கோண்ட பட்டிகை பெட்டா தங்கு
நூறுவிற் கிடைக்கு முன்னே போனது நோக்கிக் காணார். அகடு

(இ - ள்) ஆற...போல - அவவாறு-அவ-ஆறு-ஈரததகொண்டு ஓடும் ஏட்டினைத தொடர்ந்தபோய் எதிரே ஓடாமல அணைபவர்போல ; தேறும்...சென்றார் - தெளி யும் உணமையறிவு இலலாத அமணா ஆறறின கரையின்மேல் ஓடிச் சென்றனர் ; பாறும்...பட்டிகை - அகத அழியும் பொருளே மேறகொண்ட அவ்வேடு ; எட்டாது - கிட்டாது ; அகுகு...போனது - அகுகு கீழநோக்கி நூறு விற்கிடை அளவு ஊரத தின் எலலைகருமேல போய்விட்டது ; நோகைக் காணா - அவ்வெல்லையில் கண்ணால் பார்க்கவும மாட்டாராயினர்.

(வி - ரை) ஏடு எதிர் அணைப்பார்போல - கரைமசை ஓடிவந்தார் - ஆறறுடன் ஓடிய ஏட்டினை எதிர்சென்ற அணைததகொண்டு வருபவாபோலக கரையினமேல் வர் தார்கள். திகைப்பினால் தாம செயவ தின்னதென றறியாத இவவாறு செயதனர்;

தேறுமெய் உணர்விலாதார் - என்ற கருததமமத. தேறித தெளியுதறக்க உணமை யில் உணாவு. தமது முனனைய அறிவினறியும இதுவரை கிகழாத பலவற்றுலாயினும் உண்மை அறிந்துகொள்ள மாட்டாதாராகளாகிய அமணா.

பாறுதல் - அழிதல ; அப்பொருள் - அதனிகாததி என்ற மகிரம. உண்மையின் முன் கிற்கலாதருமையின் அழியும் எனறார்.

மேற்கொண்ட - மேலே பொறிகபபெற்ற - எழுதபபட்ட.

பட்டிகை - ஓலை. "பட்டோலை நீட்டிமை படிபோறறி" (போற்றிப்பஃ றொடை 38); பட்டிகை - தோணி எனறு கொண்டு இதகு ஏட்டைக் குறிததத என்பாருமுணடு.

நூறு விற்கிடை - விற்கிடை - ஒரு அளவை ; வில் கிடகரும் ஊரம். நூறு விற் கிடை - சிறு பொருள்கள் கண்மறையும ஊரம்.

நூறு விற்கிடைக்கு முன்னே போனது நோக்கிக் காணார் - போனது - போயிற றுதலின் அதனைக் கூர்ந்த நோகையும காணுதாராயினர ; நோக்கி - நோக்கியும் ; தெற்பும்மை விரிக்க ; போனது - போயினமையால் அதனை ; நோக்கி - கூர்ந்த பரத்தம்.

விற்கிடக்கை-நோக்கிச் சென்றார்—என்பனவும் பாடங்கள். 815

2714. காணவு மெய்தா வண்ணங் கடலின்மேற் செல்லு மேடு
காணிலா வமணர் தம்மை நட்டாற்றில் விட்டுப் போகச்
சேணிடைச் சென்று நின்றார்; சிதறினர்; திகைத்தார்; மன்னன்
ஆணையின் வழுவ மாட்டா தஞ்சுவா ரணைய மீண்டார். அகசு

(இ - ள்) காணவும் ..ஏடு - காணபதறகும கிடைக்காதபடி கடலின் முகமாக நோக்கிச் செல்லும் அந்த ஏடு ; காணிலா...போக - ஞாணம் இல்லாத அமணர்களை நட்டாற்றிலே கைவிட்டு அகன்ற போயிறருக ; சேணிடை ...மீண்டார் - (அவ்வமணர்) தூரத்தே சென்னூர்களும், பலவாறும சிதறண்டாகளும், திகைபபடைந்தவர்களும் ஆகி, அரசனது ஆணையில் தபபமாட்டாது அஞ்சுவாராய அவன் பக்கத்தில் மீண்டுவந்து சேர்ந்தார்கள்.

(வி - ரை) காணவும் எய்தாவண்ணம் - எதிர்சென்ற அணைப்பார்போலக் கரையின்மேல் ஓடிய அமணருகரு அவர்கள் கையில அணைக்கக் கிட்டாததோடு, காணவும் என்ற உம்மை இறந்தது தழுவிய எசசவமமை.

கடலின் மேல் - கடலினை நோகி அதன முகமாக. கடல் உள்ள திக்கு மட்டும் குறிததது.

நாணிலா அமணர் - "தோறகவும் ஆசை நீகா " (2693); "அவாவினுள்" (2712) என்ற கருத்துக்களைத தொடாநது முடிததவாறு ; மும்மூறையும் தோல்வியே பெற்ற முடிந்தனர்; தங்களுஞ சமயமே பொய்யும் வஞ்சமும் செய்ததனாலே ஒருமுறை தோல்வியுற்றமையால் அறிவு பெறற நலம் தேடிக்கொள்ளாத மீளமீளத் தோற்று மானமுமிழந்தனர் என்றவை குறிப்பு.

நட்டாற்றில் விட்டுப் போக - "நம்பினோரை நட்டாற்றில் விடுதல்" என்பது பொய்யராகிய ஜோராந் தன்மை குறிக்கும் பழமொழி. அதுபோல இவர்கள் நம்பிய பொய்ப்பொருள் பொதிந்த ஏடு, நம்பும் உண்மைப் பொருளின்மையால் நடு ஆற்றிலே விட்டு ஓடிவிட்டது ; பழமொழியில உருவகததால வநத நட்டாறு என்பது - (நடு ஆறு) இங்கு உணமை - உருவகம் -இரணடு பொருளிலும் பொருந்தியது என்ற நகைச் சுவைபடக் கூறியது காணக. நட்டாறு - நடுஆறு என்பது நட்டாறு என வந்தது புறனடையாறதொள்க. ஆறுநடு என்பதாம். உணமையில ஆற்றின் நடுவில் அமணரை அவர் நம்பிய ஏடு கைவிட்டுச் சென்றது என்பதாம்.

சேணிடை...நிகைத்தார் - சேணீற்றல் - சிதறுதல் - திகைத்தல் - மிக நம்பி எதிர்பார்த்த நிலைக்கு முறறும் மாறுய்ச சடுதியில் நோநத பெருத்தன்பத் தரும் ஏமாற்றத்தால் வரும் கிழச்சிகள் ; இதன் விளைவாக அவர்கள் ஒட்டியபடி அரசாணை தம்மைக் கழுவேற்றி அழிக்கும் என்ற எண்ணததால் இவை கிழந்தன; மேற்பாட்டில் "வெருவற்று நடுங்கித் தம்பால சுறுவக தெய்திற் றென்றே" (2714) என்பதனால் இவை, ஏடு கைவிட்டதனலன்றி, அதன் விளைவுபறறிய எணணததாலாயின என்க.

சேணிடை-சென்று நின்றார் - பெருநீருகு விளையுமிடத்தினின்ற நீங்கி நிற்பார் போல என்பது.

சிதறுதல் - தொடர்பின்றிப பல பக்கமும் சிதறுண்டு ஓடுதல். திகைத்தல் ஒன்றும் தோன்றுது மனத்தடுமாறி நிற்றல். நின்றார் முதலிய மூன்றும் முற்றெச்சங்கள். அஞ்சுவார் - அச்சத்துடன் - அஞ்சுவாராய்.

அணைய - நீருடன் சென்ற வட்டினை அணைப்பார்போன்று கரையிசை ஓடிய தூரத்தினின்று மன்னனிருந்த இடத்தினை அணைய ; சார - இனி அவன் செய்யும்

ஆணையினையும், அதன்படி கழுத்தறி கிரையினையும், கழுவேறியபின் வரும் அவ் வவ் வினைப் போக நுகர்ச்சிகளையும முறையில் அணைய எனற குறிப்புமாம்.

மீண்டார் - தமது தன்மபற்சிகளினின்றும் இப்பிறவியில் மீட்சி பெறறனர; அவற்றை இனிச் செய்யமாட்டாராய் மீண்டனர என்பதும் குறிப்பு. ஆணையின் - இன் சீக்கப்பொருளில் வரத ஐந்தனுருபு. ஆணையினால் என்று மூன்றனுருபாகக் கொண்டு அரசனது ஆணை தமமை விடாது பறறுமை என்ற காரணததால் சேண்சென்று விடாமலும் சிதறி ஓடாமலும் அணைய மீண்டார் என்றலுமாம்.

ஆணையும் வழுவமாட்டா தஞ்சுவாரடைய—என்பதும் பாடம். 816

2715. வேறெரு செயலி லாதார் வேருவுற்று நடுங்கித் தம்பால்
ஈறுவந் தெய்திற் றென்றே மன்னவ னெதிர்வந் தெய்தி,
ஊறுடை நெஞ்சி லச்சம் வெளிப்பட வோளிப்பார் போன்று
"மாறுகொண் டவரு மிட்டால் வந்தது காணு" மென்ரூர். அகள

(இ - ள்) வேறெரு ,டுங்கி - வேறு செயல ஒன்றும இலலாதவர்களாகிய அமணர்கள் வெருக்கொணடு நடுங்கி ; தமபால...எயதி - தமக்கு முடிவு வந்தலிட்ட தென்றே தணிநத அரசன் முன்பு வநத சோகது ; ஊறு உடை...போன்று - புண பட்ட தமது நெஞ்சில் பயம வெளிபபடடு வர அதனை மறைபபாபோல ; மாறு... என்ரூர் - "மாறுகொண்ட பிள்ளையாரும எட்டினை இட்டால அதன பினனை வரும் முடிவினைக் காணுங்கள்" எனறு சொன்னார்கள்.

(வி - ரை) வேறெறு செயல் இலாதார் - வேறு செயல் ஒனறும என்க; செயல்- செயத்தக்கது ; செய்யக்கூடியது. முற்றும்மை தொக்கது.

வெருவுற்று - வெருவுதல - சடுதியில வரும் அபாயத தோறறததால வரும் மன கிகழ்ச்சி. "வெருக்கொணடாற போலமுவா குறிபபயனை" (1952).

என்றே - ஏகாரம் தேறறம் எனவே தணிநது.

தம்பால் ஈறுவந்து எய்தீற்று - தம்பால் - நாணகனுருபின பொருளில் வநதது; தமக்கு. ஈறு - முடிவுகாலம, சாகுகாலம,

ஊறு உடை நெஞ்சில் அச்சம் வெளிப்பட - ஊறு - மூன்று முறையும தோலவியும், வாய் சோர்நது கழுவிலேற ஒட்டிய கிலையும, பறறிய எணணம் ; உடை-உடைய - ஈறு கெட்ட பெயரெச்சம ; ஈறு வரும என்ற எணணததால் நெருசம் கெட்டதனால் இனருப் பெயரெச்சமும ஈறு கெட்டது. ஊறு உடை - ஈறு வரும என்ற எண்ணத்தால் - ஊற்றினால் - உடைநத எனறலுமாம.

ஒளிப்பார் போன்று - என்றர் - நெருசினினறும வெளியே அச்சக்குறி காட்ட அதனை மறைப்பவாபோல "மாறு...காணும்" எனரூர ஒளிந்தலாவது தமக்கு வரும முடிவுபற்றிய எண்ணதையும அதன் வினைவாகிய மெய்பபாடுகளையும் புறதது தோற மூமல் இம்மொழிகளால் மறைத்தல ; இமமொழிகளால் இன்னும் வாதம முடியாதது போலவும் அதனால் முடிவு நிசசயமில்லாததுபோலவும பேசுதல.

மாறு...வந்தது காணும் - மாறுகோள்ஈதல் - தகைனை எதிர்தது நிறறல். இட்டால் வந்தது காணும் - அவரும எடடினை கீரில இட்டால அதுவும் ஒருவினை ஒடடிய படி அகரு நில்லாது கீரினூடு சென்றவிடுமாகில தோல்வி யிருபுறமுமாகு மாதலின் அதன் பின்பே நாகைன் தோறறமை நிச்சயிக்கவேணடும எனபது குறிபபு. இதனால் தமது தோல்வியும் அழிவும நிச்சயம் என்ற மனநதன் அணிந்துகொண்ட நிலையினையும்,

அதனால் சேர்ந்த மெய்ப்பாடுகளையும் மறைத்தமை காண்க. காணும் - அரசனையும் மன் னியாரையும் நோக்கிச் சமணர் கூறியது. காணும் - செய்யுமென்னும் வாய்ப்பாட்டு முற்று முன்னிலை ஏவற பன்மைக்கண்ணும் அருகி வருதல், "நீர்ஆக்கியவிக் கருவியி னோத்தாரும்" (2348) என்றற்போலவனவற்றிற காண்க. மறைப்பார் போன்று - மறைக்க முயன்றாகளேயன்றி மறைக்கக கூடவில்லை என்பது குறிப்பு.

மாறுகொண்டிடநும்...கார்ண்டும் என்பது பாடமாயின் பின்னையாரை நோக்கி அரு கர்கள் உரைத்ததாக உரைத்துக்கொள்க. 817

2716. மாசுசே ரமண செல்லா மதியினின் மயங்கிக் கூற
ஆசிலா நெறியிற் சேர்ந்த வரசனு மவரை விட்டுத்
தேசுடைப் பிள்ளை யார்தந திருக்குறிப் பதனை நோக்கப்
பாசுரம் பாட லுற்றார் பரசம யங்கள் பாற. அகஅ

(இ - ள்) மாசு...கூற - அழுக்கு மிகுந்த அமணர்கள் எல்லாரும் (முன் கூறிய படி) மதிமயங்கிக் கூற ; ஆசிலா...விட்டு - குறைதலை நீகாகும நெறியில் சேர்ந்த அர சனும் அவ்வமணாகளை விட்டு ; தேசுடை...நோக்க - (சிவஞான) ஒளியுடைய ஆளுடைய பின்னையாருடைய திருவுள்ளக குறிப்பு யாதோ என்று தெரியும்படி அவரை நோக்க ; பாசுரம்...பாட - பரசமயங்களால நோந்த மயக்கம அழியும்படி திருப்பாசு ரதனினைப் பாடியருளுறறனர்.

(வி - ரை) மாசு சேர் - மாசு - அகத்தும் புறத்தும் மிகச்சேர்ந்த அழுக்கு. உண் மாசு - உண்மைஞான மின்மையானும், பொய - வஞ்சனை முதலிய தீக்குணங்க ளுண்மையானும் மிகுவதாயிறறு ; புறமாசு - உடல் கழுவாமை வெயிலினிறறல் முத லியனவாய் செய்தக்கவல்லாத புறச்செயல்கள் செய்தலானும் செய்தக்க புறச்செயல்க ளில்லாமையானும் மிகுவதாயிறறு ; "தன்னுமுழு உடற்றுகளாற் சூழுணர் வினிற றுகளால், அன்னெறியிற செறிந்தடைந்த வமணமாசு கழுவுதறகு" (2549) என்ற தும் ஆண்டுரைத்ததவையும் பாாக. சேர் - மிகும். அவா வழக்குகளால் நாளும் மிகுவ தாயிற்று என்பது.

மதியினில் மயங்கிக் கூற - மதிமயக்கம் காரணமாக அவ்வாறு கூற. மதிமயக் கம் - முன் இரண்டு பாட்டுகளாலும விரிக்கப்பட்டது ; பிள்ளையார் இடும் ஏடு நீரினி லும் வெற்றிபெறும் என்பதனை மறறினிற கண்ட சாதாரண மாந்தரும் முன்னிகழ்ச்சி களின் முடிவினுல் உணர்ந்து கூறினர். 2704, 2705 பாாக. அவ்வாறிருப்பவும் கலைஞானமுடைமையோடு முன் அனுபவத்தால் கண்கூடாாக காண்பதும் பெற்ற அமணர் "இட்டால் வந்தது காணும்" என்ற ஐயபபாடு பெற அம்முடிவு இனிக் கண்டறியும் பொருளாகக் கூறியது அவர்கள் மதிமயங்கிய காரணத்தாலாயது என்று அரசன் உணர்ந்தான் என்பதாம்.

ஆசிலா நெறியிற் சேர்ந்த அரசனும் அவரை விட்டு-ஆசு இலா நெறி-குற்றத்தை இல்லையாகச் செய்யும் நெறி ; சிவநெறி. மாசுசேர் என்ற அமணரைக் கூறியதற் கேற்ப அவரினின்றும் மீறகி அரசன் சேர்ந்த இச் சிவநெறி அக்குற்றமேயன்றிப் பிறவி யாகிய நீமையினையும் இல்லையாகச் செயவதாம் என்ற இவ்வாறுரைக்கப்பட்டது ; அது ஆசுடிசர் நெறியாதலின் இஃது அவ்வாறு குற்றமிலாத - குற்றமற்ற நெறி என் றுரைப்பினுமமையும். சேர்ந்த - என்றதனால் அந்நெறியினை விட்டு இச்நெறியிற் சேர்ந்த கொள்கைபற்றிய புடைபெயர்ச்சி குறிக்கப்பட்டது.

அவரை விட்டு - "அறிவிலாப் பிணக்கினோர் மிணைஇற பிறப்பினெடு பிறப்பி னெடும் பிணங்கிடுவர்; விடுநீ" (திதி - 12 - 2); இதனோடு அமணரின சார்பும் தொடர்பும் அறவே நீக்கப்படுதலின் முடிவாக இருகு அவரை விட்டு என்றார்.

தேசு உடைப் பிள்ளையார் - தேசு - வெளுனாப பேரொளி; "பேருணர்விற் பொலிகின்ற பிள்ளையா" (2969); தேசு - திருநீறறிஞெளியுமாம்.

மாதேசர் அமணர் - ஆசிலா நேறி - தேசுடைப் பிள்ளையார் - புதச்சமயத் நீமையும், அதனிப போக்கும் சாதனமாகிய நெறியும், அதனி விளைத்தத்தரும் ஆசாரியரும், அவர்கு உள்ளே தணிநின்று அருளும் வினருளும் கூறபபட்ட நயம் காண்க. இவவாறு இக்குக் கூறியது இனி அரசன் ஞாளேபதேசம் பெறும் பக்குவ முடையனுதல குறிகக எனக. மேல்வரும் இரணடு பாட்டுகளாலும் இக்கருதநினை ஆசிரியர் விளக்குதல் காணக.

நீதுக்குறிப்பு - திருவுளளக குறிபபு நோக்குதல் - அதனி இனனதென்றறியும் கருதது வினைக அவரைப பாரததல.

நீருக்குறிப்பினை நோக்குதல் - "பிள்ளையாரும் அருகாநீரும விடிதநதவடு இடுக" (2711) என்று முனனரே ஆணை தந்த அரசன ஈணடுப பிளளையாரது திருக்குறிப்பினை நோகியதெனனியோ? எனின, முனனா "வடு இடுக" எனற ஆணை தாநதது இரு நிறமும ஒட்டி இசைந்த வாதநதநினை அவா இசைநதவாறே விகழ்ந்தவிகரும முறையில் அரசன் எனற நிலையில் நினற செய்த செயல; ஈணடு அவவாதநதநினுள அமணர் மூந்திகொணடு தமது தோல்வியை நிசசயபபடுதநிவிட்டார ஆதலான அதன்மேல பிள்ளையார செயல் வேணடப்படாமலே வாதநதின் முடிவு கூறலாரும் எனற நிலையினை அரசன உளகொணடனன்; ஆனல "மாறகொண் டவரு மிட்டால் வருதது காணும" (2724) என்று அமணா கேட்டதனுல தனக்கு வேணடாவிடினும் நடுநிலை னிறறு அசசெயலிற பிள்ளையாரது திருவுளளக் குறிப்பினைதெரியவேணடினன் அரசன். அறருயின் வடு நீரும இடுக எனறு கூறி விடாமல நோகவிடிய முறபபட்டது யாது கருதது எனின்? நீய அமணாசாரபு விட்டுப பரிபக்குவமடைநதமாணவகன் எனற நிலையினை அடைநதமையால ஆசாரியரது திருகருகுறிப்பினை எதிரேர்கி விணணபபித்தபடி எனக. இது "முனனவல வினையு நீகி முதல்வனை யறியும தனமை தனனினுன் வினைக ளொதது தலையென நிறற லாலே" (2717) என அரசனது நிலையினை யிரு வினை ஒபபும மலபரிபாகமும வருத தனமைபறறி ஆசிரியா அறிவிபபது காணக; அது பறறியே அவனுகபு பிளளையா ஞாளேபதேசம செயதமையும உணரபபடும்.

பாசுரம் - திருபபதிகம்; "வாழக அநதணா" எனற பதிகதநிறகுச் செபபுப் பெயர்.

பரசமயங்கள் பாற - பாறுதல் - அழிதல; இகு அழிதல எனறது பரசமயகளின் நீமைகளும மயக்கமும ஒழிது மறுகபபடுதலேயனறி சமயகளை அழிதல் என்பதன்று. இது முனனரும விளகபபட்டது; மேலும உரைக்கப்படும். 2718 முதல் 2741 வரை வரும பாட்டுகள் காணக.

பரசமயங்கள் என்ற பொதுவாகக கூறியதனுல புறபுறம, புறம, அகபபுறம் என்ற முககூறறு அறவகைச சமயகளின நிலைகளும குறிகபபடட்ன. "ஆறவகைச் சமயதநி னருந்தவரும புக்கதற்பின" எனப பினனாக் கூறதலின் அகச் சமயத்தார் தழீஇக்கொள்ளறகருரியார என்க. சமணததை முனனரே சுரவாதம - கனலவாதம - புனல்வாதம் என்ற மூன்றனும் வெறறிகொணடு சைவமேனமை காட்டினார; ஆயின் அறதைகாட் சமணதநின் பொயமை அறபுதச செயல்களபறறி நெருபபினும் நீரினும் கொண்ட வெறறியின்மூலம் காட்டபபட்டதன்றி, அதன் கொள்கைகளின் நீழ்மைகள்

